# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 7 ஜூன் 2024



# ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

## “தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்”

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...


SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

**பதிவு அலுவலகம்:**
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

**நிர்வாக அலுவலகம்:**
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

**மத்திய அலுவலகம்:**
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

**WWW.SREEVISALAM.COM +91 86670 03356**




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக

நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...

இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்

உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 7 ஜூன் 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

நா. சோமசுந்தரம்

தேவகோட்டை

---

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு ...

வணக்கம் ...!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல் , ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி !

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள் !

மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூகப் பணிகள், நிகழ்வுகள், என பன்முகப் பகிர்வாய் இந்த மலர் மிளிர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அந்த வகையில் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது . வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக அண்மையில் மின்னிதழின் **MOBILE APP** வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது .

மேலும் அனைவரது ஆலோசனைகளையும் , கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வப்போது செய்த வண்ணம் இருக்கின்றோம் .

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

'இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு' என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும் .

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள் , ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,

நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்

பதிப்பாசிரியர்


PALLATHUR MOTORS LLP
SWITCH TO THE FUTURE
PETROL
RIDER LIFE
SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !
PETROL STATION
ELECTRIC
RIDER LIFE
SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!
ELECTRIFY YOUR
JOURNEY NOW
Go far and wide with just
a single charge
LECTRIX
Book Your
TEST DR!VE
Now!!
மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735
பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

**நமது சிந்தனைக்கு**

- இளமையில் வறுமை இறைவனின் வரமா?
  – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ............. 11

**கவிச்சோலை**

- விலைக்கல்ல – நா.அருணாச்சலம் ............................................ 20
- வாடகைத்தாய் – அரு. சிவகாமி இராமனாதன் ................................... 38
- மரமே.. வரமே.. தருமே..! – எம். சோலை ............................................ 44

**மொழி**

- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் ................................. 21

**பக்தித்தொடர்**

- துரோணரின் மகள் – த. கோவேந்தன் ................................................ 29

**வாழ்வியல்**

- பெண் கதவு ஆண் பூட்டு – சேவு.முத்துக்குமார் ......................................... 35

**சிறுவர் பக்கம்**

- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் .......................... 39

**ஆன்மிகம்**

- பெண்கள் சமையலறையில் எதை முதலில் சமைக்க வேண்டும்? ............. 40

**நேர்காணல்**

- முல்லைப்பதிப்பகம் திரு.மு. பழநியப்பன் அவர்களுடன் நேர்காணல் ......... 58

**சமையல்**

- செட்டிநாட்டு ஐந்தரிசி பணியாரம் – விஜயலெட்சுமி செந்தில்நாதன் .......... 59

**உணவே மருந்து**

- முழு உடலையும் காக்கும் முள்ளங்கி ................................................ 61

**நிதிமேலாண்மை**

- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ ....... 69

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி .. கடக லக்கினம் – ஜோதிடர். எல்லி ................................ 79

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534

naamnagarathar@outlook.com

# நகரத்தார் சமூகத்தில் மேலும் ஒரு

# மாபெரும் சாதனை

உலகிலேயே சிறப்பானதும் , மிகவும் பெருமையானதுமான
**INDIA**- வில் உள்ள **NATIONAL LAW UNIVERSITY CONSORTIUM.**
இதில் **ADMIT** ஆக இந்தியா முழுவதிலும் இருந்து கிட்டத்தட்ட ,
ஒரு லட்சத்து , பத்தாயிரம் மாணவர்கள் தேர்வு எழுதியதில்,
எங்களது பேரனும் , **R.**சடையப்பன் மகனுமாகிய



## S.KARTIK KRISHNAN

498 வது Rank வாங்கி (498 / 1,10 ,000) , புகழ் பெற்ற **MUMBAI NATIONAL LAW UNIVERSITY ( MNLU.** மும்பை) இடம் பெற்று , நம் சமூகத்தில் சகாப்தம் படைத்திருக்கின்றான். எங்கள் **KARTIK** யை மனதாரப் பாராட்டுகின்றோம்.

" வாழ்த்துக்கள் **KARTIK** "

மேலும் **Practice** செய்வதை விட , அனைத்து துறைகளிலும் , குறிப்பாக **CORPORATE LAW** என்ற **KARTIK** ன் கனவும் தற்சமயம் நனவாகியிருக்கின்றது. இந்த மகிழ்வான தருணத்தை நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம் .

**Sai , Richie** அருளுடன்

**S.**ராமகிருஷ்ணன் (பெங்களூரு)
மாத்தூர் கோவில் – கருப்பூர்
நேமத்தான்பட்டி . **Cell :** 94483 82829



# இளமையில் வறுமை இறைவனின் வரமா?

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.



மக்கள் தொகை அதிகமுள்ள இந்தியா போன்ற நாட்டில் வறுமையின் பிடியில் வாழ்வோரின் எண்ணிக்கை அதிகம். உலகநாடுகள் அனைத்தும் வறுமையை ஒழிப்போம்! என்று அடிக்கடி குரல் கொடுத்துக்கொண்டே உள்ளார்கள். ஆனால் எந்த நாட்டில் இருந்தும் வறுமை விரட்டப்படவில்லை, மாறாக வறுமை வளர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

வறுமையின் கொடுமையை வார்த்தையால் விவரிக்க முடியாது. வறுமை என்னும் பேய் தனது கோரப்பசிக்கு எத்தனையோ மனித உயிர்களைப்பலி கொண்டு விட்டது. ஒரு நாட்டில் வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை கூடுவதற்கு பல்வேறு காரணங்கள் உண்டு.

இயற்கையாக ஏற்படும் பஞ்சத்தின் காரணமாக வறுமை ஏற்படும். ஒரு நாடு இன்னொரு நாட்டோடு போர் புரியும் சூழ்நிலை உருவான பின்பு,போரின் தாக்கத்தால்,உணவு பற்றாக்குறை ஏற்பட்டு வறுமை உருவாகும்.

ஒரு நாட்டின் தட்வெட்ப நிலையால்,உணவுப் பொருட்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வார்கள். அப்படி இறக்குமதி செய்யப்படுகிற நாடுகளில் ஏற்படும் பொருளாதாரச் சீர்குலைவால் இறக்குமதி பாதிக்கப்பட்டால்,உணவு கிடைக்காமல் வறுமை உண்டாகும்.

இயற்கைச்சீற்றத்தால் நாட்டின் வளம் அழிந்து போனால்,அந்த நாட்டில் வறுமை நிலவும்.

பல மேலைநாடுகளிலும், இந்தியாவிலும் மேலே சொன்ன காரணங்கள் ஏதுமின்றி வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை குறையவேயில்லை மாறாக கூடிக்கொண்டேதான் உள்ளது.

வறுமைக்கோட்டுக்கு கீழே வாழ்வோரின் எண்ணிக்கையை குறைத்து விட்டோம் என்று அடிக்கடி அதிகாரத்தில் உள்ளோர் சொல்கிறார்கள்.

ஆனால் வறுமையிலே வாடுவோர் பலருக்கும் வேலையில்லை,தங்கிவாழ இடமில்லை,உடுத்திவாழத் துணியில்லை.

மனிதர்களாக அவர்கள் இந்த உலகத்தில் பிறந்தது தவறா? இல்லை அந்த மனிதர்களை ஏழைகளாகப் படைத்து, வறுமையிலே திகழவிட்ட இறைவனின் தவறா?

வறுமையிலே வாடுவோரின் இன்னல்களை எந்த அதிகார வர்க்கத்தினரும், பெரும்பணக்காரர்களும் கண்டு கொள்வதேயில்லை.

அதற்கு காரணம் வறுமையிலே வாடும் வர்க்கத்தினரைமுன்னேற்ற இங்கே எவரும் விரும்புவதில்லை. தெருவோரத்தில்,வாகன நிறுத்தத்தில்,கடை வாசல்களில்

கையேந்தி நிற்கின்ற எத்தனையோ இளம் குழந்தைகளைப் பார்க்கும் பொழுதுதான், வறுமை எவ்வளவு கொடியது? என்பதை நாம் உணர முடியும்.

இந்த உலகில் கொடியது எது? என்று ஔவையாரிடம் கேட்ட போது,அவர் சொன்ன பதில்,

கொடிது!கொடிது!

வறுமை கொடிது!

அதனினும் கொடிது

இளமையில் வறுமை!



என்றார்.இதன் பொருள் எளிதுதான்:

கொடியது எது? என்று கேட்டால்,சந்தேகம் இல்லாமல் சொல்ல வேண்டும் என்றால் வறுமைதான் கொடியது.

அதைவிடக்கொடியது இந்த உலகில் இளமையில் வறுமை கொடியது! என்கிறார் ஔவையார். தாய் தந்தையை இழந்த குழந்தைகளின் வறுமை நிலை,இந்த உலகில் எவருக்கும் வந்துவிடக் கூடாது. ஏதும் அறியாத வயதில்,திக்குத்தெரியாத ஊரில் யாரிடம் சென்று அடைக்கலம் தேடுவார்கள் அந்தச்சின்னசிறு குழந்தைகள்?

இளமையில் வறுமை எவ்வளவு கொடியது! என்று என் தந்தையார் அடிக்கடி என்னிடம் சொல்வதுண்டு.

என் தந்தையார் அவரது இளம் வயதில் தாயையும் தந்தையையும் இழந்தவர்கள். அடுத்தவேளை உணவை யார் நமக்குத் தருவார்கள்? இரவிலே எங்கே தூங்குவது? உடுத்தஉடை யார் எடுத்துத்தருவார்கள்? நம்மை யார் படிக்க வைப்பார்கள்? இது போன்ற கேள்விக்கெல்லாம் விடை தெரியாத வயது! சூழ்நிலை எவ்வளவு சிக்கலானது என்று புரிந்து கொள்ள முடியாத இளம் வயது.

1900 ஆண்டுகளில் இது போன்று தனித்து நிற்கின்ற குழந்தைகளை, உறவினர்கள் ஒரு சிலர் காப்பாற்றினர். அந்தக் குழந்தைகளை ஆளாக்கி விட்டனர். இன்றைக்கு இருப்பதுபோல அனாதை ஆசிரமங்கள் அப்போது இல்லை.

என்தந்தையின் நிலை கண்டு வருந்திய அவரது தாயோடு பிறந்த அக்கா தங்கைகள்,தன் சகோதரியின் பிள்ளை என நினைத்து ஆதரித்தார் களாம். ஆனால் எங்கும் என்னை நிரந்தரமாக வைத்துக்கொள்ளவில்லை என்பார்கள்.

அதற்கு என்ன காரணம்? என்று அறிந்துகொள்ள இயலாத வயது என்னுடைய வயது என்பார்கள். ஒரு வருடம் காரைக்குடியில் இருப்பேன்.அடுத்தவருடம் ஆத்தங்குடிக்கு கொண்டு போய் விட்டு விடுவார்கள். அடுத்த ஆண்டு பலவான்குடி பின்பு விராமதி இப்படி பல ஊர்களிலும்

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI
Since 2005

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

**ரூ.1,00,000/– முதல்**

**ரூ.25,00,000/– வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-145D,NVV கேஸ்டில் முதல் தளம்,
வெது கிராஸ் கிழக்கு, தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி – 620 018
Cell: 0431-2760064,
90809 78057, 9487885143.

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

உள்ள சொந்தங்கள் வீட்டிற்கு விரும்பாத விருந்தாளி யாகப்போய்ச்சேர்ந்தேன். அங்கும் நான் அவர்கள் சொல்லும் வேலைகளைச் செய்வேன். என் வயது ஒத்த அவர்கள் வீட்டுப்பிள்ளைகள் ஓடி ஆடி விளையாடு வார்கள். நான் மட்டும் அவர்களோடு சேர்ந்து விளையாட முடியாது.

அவர்களை தின்னைப் பள்ளிக்கூடத்தில் படிக்க வைப்பார்கள். என்னை மட்டும் வீட்டில் இரு! வேலைக்குத் துணையாய் இரு! என்பார்கள். என் நலம் குறித்து யாருக்கு கவலை? என்னைப்பெற்ற தாயோ அல்லது தகப்பனோ உடன் இருந்தால் என்னை இப்படி கைவிட்டு இருக்க மாட்டார்கள் இல்லையா?

உறவினர்கள் அடிக்கடி என் காதுக்கு கேட்பதுபோல ,வீட்டிற்கு வந்த விருந்தாளிகளிடம் பேசுவார்கள்.என் தங்கச்சி மகன்,தாயில்லாப்பிள்ளை,தவிச்சுப்போய் தனியா நின்ன புள்ளையை,நான் இங்கே கூட்டியாந்து ,சோறு போட்டு வச்சிருக்கேன்! எவ்வளவு நாட்களுக்கு நானே வச்சிருக்க முடியும்?அடுத்த வருஷம் எங்காவது கொண்டுபோய்த் தான் விடவேண்டும்.

நமக்கென்ன இது தலையெழுத்தா?என்று தனது ஆதங்கத்தை கொட்டுவார்கள். அப்போதே நான் புரிந்து கொள்வேன், அடுத்த ஊரை நோக்கி நாம் எப்போது போகப் போகிறோம்? என்று நினைத்துக்கொள்வேன்.

தம்பி இளமையில் ஆதரவு அற்று, தாய் தந்தையர் இல்லாமல் தவித்த என்னைப்போன்ற இளம் வயதுப்பிள்ளைகள் அனுபவித்த வறுமை கொடியதிலும் கொடியது என்பார்கள்.

படிப்பின் மீது எனக்கிருந்த ஆசையால் பள்ளிக்கூடம் போகாமல்,ஆசிரியர் ஒருவர் வீட்டில் வேலைபார்த்து அவரிடமே கல்வி கற்றேன். அதுதான் இறுதிவரை என்னை வாழ வைத்தது.

இருந்தாலும் இன்று வரை நம்மை வறுமை விட்டுச் செல்லவில்லையே! சிலரை மட்டும் வறுமை

விட்டுவிடாமல் சோதித்துக் கொண்டே இருக்கிறது என்பார்கள். வறுமையிலும் திறமையோடும்,நேர்மையோடும் வாழவேண்டும். அதுதான் நமக்கு அழகு. தன்மானத்தை இழந்து வெகுமானத்தைப் பெறக்கூடாது. வறுமையின் கொடுமையைக்கூட பொறுத்துக்கொள்ளலாம், ஒரு நாளும் தன்மானத்தை இழந்து விடாதே! என்பார்கள். இன்றுவரை அவர்கள் காட்டிய

வழியிலேதான் நான் பயணித்துக் கொண்டிருக்கிறேன். ஆம் நண்பர்கள்! இளமையில் வறுமை என்பது இறைவனின் வரமா? என்பதை விட,இல்லையில்லை அது இயற்கையின் கொடுமை என்றுதான் சொல்ல வேண்டும்.



வள்ளல் பெருமான் எப்பொழுதும் பசிப்பிணி தீருங்கள்! என்பார். பசிப்பிணியைப் போக்கினால் பாரதம் சிறப்புற்று விளங்கும் என்பார். தனிமனிதன் உணவின்றி தவிப்பதை தவிர்க்க வேண்டும்.



வறுமையை முற்றிலும் விரட்டவேண்டும். எல்லோரும் ஒரு நிலை என்ற நிலையை உருவாக்க வேண்டும். வறுமையில் வாடும் இளம் பிள்ளைகளை கண்டு உணர்ந்து, நம்மால் இயன்றதை அவர்களுக்குச் செய்வோம். அடுத்தவர் களுக்கும் அவர்களைப் பற்றி எடுத்துச்சொல்லி நற்செயல் புரிய வைப்போம்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! அதுவரை காத்திருக்க இயலுமா?



கட்டுரை ஆசிரியர்
தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



**PL RAMANATHAN (KANDANUR)**

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

# விலைக்கல்ல..!!

விதைக்கப்பட்ட சிந்தனைகளில்
முளைக்கும் கருக்கள் கருப்பைக்குள்ளே
தானே பெயர் சூட்டிக் கொள்ளுவதில்லை.

வீரிய ஒட்டிற்காய் கிளை ஒடிக்கும்
சித்தாந்தத்திற்குள்
அணுக்களை கலக்க அனுமதியில்லை.

விலாசம் பார்த்து
விளம்பரம் வாங்கும் வரிகள்
பாராட்டிலே கருவை கலைக்கின்றன.

விமர்சனம் தவிர்க்கும் பதர்கள்
அறுவடைக்கு முன்
காளைக்குப் பதில் கழுதையைப் பூட்டி

உழுது கட்டியம் கட்டிக்கொள்கிறார்கள்.
முகம் அறியா முகவரி இல்லா
அறிமுகம் கொள்ளா மனிதன்

எவன் என் வார்த்தைகளை
மறுமுறை தேடும் போது
என் வரிகள் கவிதை என பெயர் கொள்ளும்.

அதுவரை நான் எழுதுவதெல்லாம்
கவிதைகள் இல்லை!
படைப்புக்கள் என்றும் விற்பனைக்கு இல்லை!

கடைசி வரை என் அனுபவப்
பிழைகளை கவிதை என்று
சொல்லப் போவதில்லை!

என்று என் ஒற்றைச் சொல்
மானுடத்தில் மாற்றத்தை உண்டாக்குகிறதோ
அன்றே என் எழுத்துக்கள் உயிர் பெறும்.



முனைவர். நா.அருணாச்சலம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி

# வாங்க பேசலாம்..!

## (செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)



-பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

பகுதி - 7

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!**



நம் நகரத்தார்களின் சிறப்பு எது? எது அவர்களுக்கான பெருமை? எது இன்றளவும் அவர்களைச் சமுதாயத்தில் உயர்வு கொள்ள வைத்திருக்கிறது? இவை அனைத்திற்கு ஒரே பதில், நம் ஐயாக்களது ஆன்மீகத்தின் மீதான ஈடுபாடு. கடவுள் மீதான முழு சரணாகதி நிலை.

அதன் மூலமாக உருவான ஒழுக்க நெறி. ஒழுக்கத்தால் உண்டான உயர் பண்புகள். கட்டுச்செட்டான வாழ்க்கை. உயர்ந்த அறச் சிந்தனை. அதன் காரணமாக தன் சொந்தப் பொருள் கொண்டு செய்த தான தருமங்கள். அவற்றில் இன்றளவும் நம் இனத்தின் பெருமையை நிலைநாட்டுவது, கல்விக் கொடையே.

அடுத்ததாக கோயில் திருப்பணிகள். தற்போதும் அவ்வறப்பணிகள் தொடந்து நம்மவர்களால் இக்காலச் சூழலுக்கு ஏற்றவாறு செய்யப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. அம் முன்னோர் தம் வாழ்வில் பயன்படுத்திய பேசிய சொற்களின் ஆழம் காண்பதே இக் கட்டுரையின் நோக்கம்.

### அஞ்சறைப் பெட்டி

ஆத்தா உமையா! அஞ்சறப்பெட்டியில இருந்து கொஞ்சம் மிளகு எடுத்துக்கிட்டு, வெத்தலப் பெட்டியிலயிருந்து வெத்தலையும் மடிச்சு எடுத்துக்கிட்டு வா. தம்பிக்கு சளியாக இருக்கு என்று நம் ஆயாக்களும், அப்பத்தாக்களும் கூறியிருப்பர். அக்காலத்தில் மரம்,பித்தளை, அலுமினியத்தால் தயாரிக்கப்பட்ட அஞ்சறைப் பெட்டிகள் அடுப்படியை அலங்கரிக்கும்.



இன்று அவை பிளாஸ்டிக் டப்பாக்களாக மாற்றம் பெற்றுவிட்டன. ஆயினும் இன்றுவரை அடுக்களையின் அரசனாக அஞ்சறைப் பெட்டி இருக்கிறது. ஐந்து+அறை+பெட்டி = அஞ்சறைப் பெட்டி. அதாவது. ஐந்து அறைகளைக் கொண்ட வடிவமைப்பில்இருப்பதால்இது அஞ்சறைப் பெட்டி என அழைக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீ நித்யகல்யாணி
## சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

**அடசல்**

வீட்டச்சுத்தி ஒரே அடசலா இருக்கு. வெட்டி சுத்தம் பண்றது இல்லையா? என்றுஇன்றும் நாம் கேட்பதுண்டு. அடசல் என்பது மருவிய சொல். அடைசல் என்பதே

சரியான சொல். அடைசல் என்பதற்கு அதிக நெருக்கம் என்பது பொருள். அது வீட்டில் உள்ள பொருட்களையும் குறிக்கும், செடி கொடிகளையும் குறிக்கும். அடைத்தல் அடைச்சல் அடைசல்.

**அடாவடி**

என்ன? ஒரு கேள்விகேட்டா, பதில் சொல்லு, அதவிட்டுட்டு அடாவடத்தனம் பண்ற என்பதில் அடா என்ற சொல்லுக்கு அடாத (தகாத) என்பது பொருள். அடா+அடி= அடாவடி . முறையற்ற வகையில் பேசும்போதும், செயல்களைச் செய்யும் போதும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

**அடிக்கட்டை**

கடைகளில் இரசீது எழுதும் போது, கார்பன் தாள் வைத்து எழுதுவர். மேலே உள்ள தாளைக் கிழித்து பொருள் வாக்குபவரிடம் கொடுப்பர். கார்பன் தாள் வைத்து எழுதப்பட்ட இரசீதினைத் தங்களுக்கு வைத்துக்கொள்ளுவர். இவ்வாறு கார்பன் தாள் வைத்து எழுதுவதை நகரத்தார்கள் அடிக்கட்டை என்றழைப்பர். இன்றும் வயதில் முதிர்ந்தவர்கள் அவ்வாறு சொல்வதைக் கேட்டிருக்கலாம்.

**அடுக்கு**

பெண்ணுக்கு வைக்கும் சீரில், என் மகளுக்கு பித்தளைச் சட்டி 16 அடுக்கு , வெள்ளிச் சட்டி 11 அடுக்கு வைத்தேன் என ஆச்சிமார்கள் பெருமையாகப் பேசுவதைக் கேட்டிருக்கலாம். ஒன்றுக்குள் ஒன்று சேரக் கூடிய சட்டிகள் அடுக்கி இருப்பதை அடுக்கு என அழைப்பர்.




## அண்ணாக்க



ஏழு கழுதை வயசாச்சு, இன்னும் வாய்வச்சு தண்ணி குடிக்கிற. அண்ணாக்க குடி என்று அம்மாக்கள் மகன் மகள்களை கூறுவதைக் கேட்டிருக்கலாம். மேல் நோக்கி பல்லில் அல்லது உதட்டில் படாமல் நீர் குடிக்க வேண்டும் என்பதை நீளமாகச் சொல்லாமல் நம்மவர்கள் அண்ணாக்க என்று சுருக்கமாகச் சொல்லியிருக்கின்றனர்.

## அண்ணாவி



நீ என்ன பெரிய அண்ணாவியா?. நாங்க அண்ணன் தம்பி அடிச்சிக்வோம், பேசிக்குவோம். நீ என்ன வந்து பேசுற? என்ற தொடரில் அண்ணாவி என்பதை முன்பெல்லாம்

அடிக்கடி பலர் பயன்படுத்துவர். இன்று இச்சொல்லைப் பயன்படுத்துபவர்கள் மிகச் சிலரே. அண்ணாவி என்றால் ஆசிரியர் என்பது பொருள்.

அண்ணாவி தொடர்பான பழமொழிகளும் உண்டு. தன்னாலே தான் கெட்டால், அண்ணாவி என்ன செய்வான்? , அண்ணாவிதான் செத்தார். அவர் சொல்லிக் கொடுத்த பாடமுமா செத்தது?

**அண்ணமுண்டி**



எங்க அண்ணமுண்டி கொப்பனாபட் டியில பொறந்தவுக. வெள்ளமா கொண்டு வந்தவுக என்று பெருமையாகச் சொல்லப்படும் அண்ணமுண்டி இன்றைய அண்ணி.

அண்ணன்பெண்டிர்(அண்ணன் மனைவி) என்பதன் மருஉ சொல் அண்ணமுண்டி என்பது.

– தொடர்ந்து பேசுவோம் !...

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்


உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும்
Return gift Purpose க்கும் மொத்தமாகவும்
சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா




தேவகோட்டை
முருகா மாணிக்கவாசகன்செட்டியார் இளைய மகன் வெங்கடாசலத்திற்கும் , பதிப்புத் துறை முன்னோடி முல்லை முத்தையாவின் இளைய மகள் உமாவுக்கும் **29.5.2024 சஷ்டியப்த பூர்த்தி சாந்தி விழா தேவகோட்டை நகரத்தார் விழா** வளாகத்தில் சிறப்புற நடைபெற்றது. உடன் மகன் ஐயப்பன் , மருமகள் சீதாலட்சுமி , பேத்தி ஆராதனா மற்றும் இளைய மகன் மணிகண்டன் ஆகியோர் உள்ளனர்.

நாம் நகரத்தார் மின்னிதழ் மற்றும் நமது வாசகர்கள் சார்பாக மணி விழா தம்பதியர்களை வாழ்த்தி மகிழ்வோம் .

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – 26

# துரோணரின் மகள்

– புலவர் த.கோவேந்தன், டி.லிட்



வில் ஆசிரியர் துரோணருக்கு ஒரு மகன் இருப்பது தான் நமக்குத் தெரியும். அவன் பெயர் அசுவத்தாமன். அவன் சிரஞ்சீவி.

துரோணருக்கு ஒரு மகள் இருந்ததாகவும் அவள் பெயர் சாந்தா என்றும் நாடோடிக் கதை ஒன்று கூறுகின்றது. அவள் வரலாறு அற்புதமானது. அதைச் சிறிது காண்போம்.

ஒரு நாள் துரோணர் வீட்டில் இறை வழிபாடு செய்து கொண்டிருந்தார். அவ்வூரில் திருக்குலத்து அடியார் ஒருவர் இருந்தார். அவர் பெயர் சேதா. மிக்க பக்திமானாக இருந்தமையால் பக்த சேதா என்று அழைக்கப்பட்டார்.

அவர் மனைவி பெயர் காந்தா, அவர்களுக்கு ஒரு மகள் அவள் பெயர் சேவா.

துரோணர் வீட்டில் வழிபாடு நடப்பதைப் போலத் தன் வீட்டிலும் வழிபாடு நடத்தல் வேண்டும் என்பது சேவாவின் ஆசை. வழிபாட்டுக்கு மலர் வேண்டுமே!

தன். தந்தை தைத்த செருப்புக்களைத் துரோணரின் சீடரிடம் கொண்டு போய்த்தந்து, அவர்களிடம் மலர்களை வாங்கிவந்து, தன் தந்தையிடம் இறை வழிபாட்டுக்குத் தந்தாள் சேவா. செருப்புக்கு மலர் மட்டும் விலையாகுமா? மேலும் பணம் கேட்டு வாங்கி வா என்று காந்தா தன் மகளைத் துரோணர் வீட்டுக்கு அனுப்பினாள்.

அங்குச் சென்ற சேவா, துரோனர் மகள் சாந்தாவிடம் பேசிக் கொண்டிருந்தபோது, என் தந்தை படைக்கும் நைவேத்யத்தைப் பகவான் நேரில் வந்து உண்கின்றார் என்றாள். சாந்தா, இதை நம்பவில்லை. நீ சொல்வது பொய் என்று சேவாவிட்ம் கூறினாள்.

நீ என்னுடன் வா! நான் சொல்வது உண்மை என்று நிரூபிக்கின்றேன் என்றாள் சேவா.


சேவாவுடன் சென்ற சாந்தா, அவள் கூறியது உண்மை என்பதைக் கண்ணாரக் கண்டு வியப்புற்றாள். உடனே வேகமாக ஓடி வந்து, தன் தந்தை துரோனரிடம், தான் கண்ட அதிசயத்தைக் கூறினாள்.

துரோணர், மகளின் கூற்றை நம்பவில்லை. சாந்தாவுக்கு மூளை குழம்பிவிட்டதால், இப்படி உளறுகின்றாள். தாழ்குலத்தான் படைக்கும் நைவேத்யத்தை இறைவன் ஏற்பானா? என்று கருதி, அவளை வீட்டில் அடைத்து வைத்தார்.

கீழ்க்குலத்தானாகிய சேதா இறைவனை வழிபடுவதாக நடித்து இப்படிப் பொய்க் கதைகளைக் கட்டி விடுகின்றான். அவனை இப்படியே விட்டு வைத்தால், சாதி மரியாதையைக் குலைத்துவிடுவான். தாழ்குலத்தானுக்கு இறை வழிபாடு செய்ய உரிமை ஏது? உடனே அவனுக்குத் தக்கபுத்தி புகட்ட வேண்டும் என்று முடிவு செய்தார் துரோணர். கீழ்க்குலத்தான் என்பதற்காக ஏகலைவன் வலதுகைப் பெருவிரலை வெட்டச் செய்தவர் அல்லவா துரோணர்!

உடனே சேதாவை அழைத்து வரச் செய்தார். நாளைக் காலையில், ஆயிரம் சோடி செருப்புக்கள் அவசியம் தருதல் வேண்டும். இல்லையேல், மரண தண்டனை தரச்செய்வேன் என்று கடுமையான உத்தரவிட்டார்.

என்ன செய்வார் சேதா! ஒரு நாளில் ஒரு சோடி செருப்புத் தான் தைக்க இயலும் ஆயிரம் சோடி தைப்பது எப்படி? அதற்கு வேண்டிய மூலப் பொருளுக்கு எங்கே பேர்வது? சரி நம் தலை தப்பாது என்று அழுது கொண்டே வீடு வந்து சேர்ந்தார். வந்த சோர்வால் அப்படியே தூங்கி விட்டார்.



விடிந்ததை உணர்ந்து எழுந்தார். ஆயிரம் சோடிசெருப்புக்கள் தைக்கப்பட்டு அடுக்கடுக்காகக் கட்டி வைக்கப் பட்டிருந்ததைப் பார்த்தார். ஏது. இவை? எங்கிருந்து வந்தன என்று திகைத்தார். இறைவனே நமக்காக இவற்றைத் தைத்து வைத்துள்ளான் என்று தெரிந்து கொண்டார்.

துரோணரின் உத்தரவுப்படி குறித்த நேரத்தில் ஆயிரம் சோடியையும் கொண்டுபோய்ச் சமர்ப்பித்தார் சேதா!


சேதாவின் செயல் கண்டு மகிழ்வதற்குப் பதிலாக அவன் மேல் சினம் கொண்டார் துரோணர். தம் கை வலிக்கும் வரைக்கும் சேதாவைத் தடியால் அடித்தார். சேதா அலுங்காமல் குலுங்காமல் நின்றார். ஏன் நிற்கமாட்டார்? அடியெல்லாம் இறைவன் அல்லவா தாங்கிக் கொண்டான். வீட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த சந்தா, தந்தையின் கொடுமை கண்டு, உண்ணா நோன்பு மேற்கொண்டாள். தன் பக்தை வீட்டுச் சிறையில் உண்ணாமல் உடல் வருந்துவதை இறைவன் பொறுப்பானோ?

வீட்டுக்கதவு தானாகவே திறந்து கொண்டது. சாந்தா வெளியேறினாள். சாந்தா தப்பி விட்டதை அறிந்த துரோணர்க்கு அடங்காச் சினம் மூண்டது. துரியோதன மன்னனிடம் சென்று, இந்தச் சேதா ஏமாற்றுக்காரன். மாயா ஜாலம் தெரிந்து வைத்து, பக்தனைப் போல் நடித்து மக்களை ஏமாற்றுகின்றான். தாழ்குலத்தானாகிய இவனுக்குக் கடுமையான தண்டனை தரல் வேண்டும். தண்டனை தாராவிடின், நான் உன் முகத்தில் விழிக்கமாட்டேன் என்று சூள் உரைத்தார்.

ஆசாரியன் வாக்கைச் சீடன் மீறலாமா? இந்தச் சேதாவின் கண்களைப் பிடுங்கிக் கைகளை வெட்டி விடுங்கள் என்று உத்தரவிட்டான் துரியோதளன். சேதாவின் மனைவி காந்தா சிறைக்கு வந்து தன் கணவனுக்கு நேர்ந்த அவலநிலை கண்டு அலறினாள்.

இந்த அவலம் கண்ட கண்கள் எனக்கு ஏன் என்று தன் கண்களைப் பிடுங்கிக் கொண்டாள். அந்தக் கற்புக்கரசியின் கதறல் வீண் ஆகுமா? அந்த அவலக்குரல், இறைவன் காதில் படாதா?

பெரும் பூகம்பம் நிகழ்ந்தது. சிறைச்சாலை தகர்ந்தது. அந்நேரம் ஒரு குறவனும் குறத்தியும் எங்கிருந்தோ தோன்றினர். அவர்கள் தொட்டவுடனே சேதாவின் கால்கள் பொருந்திக் கொண்டன. கணவன்–மனைவி இருவர் கண்களும் ஒளி பெற்றன.



துரோணரின் வீட்டிலிருந்து தப்பிய சாந்தா திருக்குலத்தார். சேரிக்கு ஓடினாள். ஏனென்றால் சேரி முழுவதும் தீயிட்டு அழிக்கப் போவதாகத் துரோணர் கூறிக் கொண்டிருந்தார். துரோணர் கொடுமையிலிருந்து சேரிமக்களைக் காக்கவே சாந்தா அங்கே விரைந்தாள்.

துரோணர் சொன்னபடி சேரி தீப்பற்றி எரியத் தொடங்கியது. சாந்தா, சேரிக்குழந்தைகளைக் காப்பதில் ஈடுபட்டாள். தன் உடலில் தீப்புண் ஏற்படுமே என்று அஞ்சாமல் சேரியினரைக் காப்பாற்ற முனைந்து நின்றாள். சாந்தா தீக்கு நடுவே சேரியிலிருப்பதைக் கேள்விப்பட்ட துரோணர் சேரிக்கு ஓடினார். அதற்குள் தீயில் வெந்து விடாமல் சாந்தாவைச் சேவா மீட்டு விட்டாள்.தாங்கள் வழிபடும் இறைவன் திருவிக்கிரகத்தைக் காப்பதற்காகச் சேதாவும் காந்தாவும் ஓடினர்.

என்ன அதிசயம்! அங்கு நெருப்பே பரவவில்லை. இறைவன் முன் அமர்ந்து சேவாவும் சாந்தாவும் இறைவனை வழிப்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்துச் சேதாவும் காந்தாவும் இறைவன் திருவருளை எண்ணிக் கண்ணிர் சொரிந்தனர். திடீரென்று நெருப்பு அணைந்து விட்டது. அந்த நெருப்பினால், சேரிக்கு எவ்விதச் சேதமும் நேரவில்லை.

மகளைக் காண ஓடிய துரோனர். சேதாவின் வீட்டில் இறைவன் முன், சேவாவுடன் அவள் இருப்பதைக் கண்டார். கீழ்க்குலச் சேரி என்ற எண்ணம் தகர்ந்தது. சேரி வீட்டில் – சேதா வீட்டில் – நுழைந்தார். அங்குக் குடி கொண்டிருந்த இறைவன் முன் விழுந்து வணங்கினார்.

பக்த சேதா அவர்களே! தங்கள் பெருமை அறியாமல், சாதி வெறியால் நீதி தவறிப் பல தீங்குகளை உமக்குச் செய்து விட்டேன். அதற்காக என்னை மன்னிக்க வேண்டும் என்று சேதாவின் திருவடிகளிலும் விழுந்து வணங்கினார் துரோணர்.

பின்பு தம் மகள் சந்தரவைத் தழுவிக் கொண்டு, மகளே! சாதி வெறித் திரை மூடியிருந்த என் கண்களைத் திறந்துவிட்ட தெய்வம் நீ! என் அகந்தையை நொறுக்க வந்த சம்மட்டி நீ! இனி இத்தகைய செயல்களில் ஈடுபடமாட்டேன் என்று குரல் தழுதழுக்கக் கண்ணீர் சொரிந்து தன் செயலுக்குக் கழுவாய் தேடலானார்.



- நம் பிரச்னைகளுக்குக் காரணமே, போதிய நேரமிருக்கிறது என்று எண்ணுவதுதான்.
- எதற்காகவும் அவசரப்படாதீர்கள், நேரம் வரும்போது தானாகவே அது நடந்தேறும்.

– புத்தர்

பெண் கதவு, ஆண் பூட்டு – 7

# பெண் சக்தி




மனைவி சண்டை இடுவது அன்பிற்காகத்தானே தவிர வீண்வம்பிற்காக அல்ல..

செய்த தப்பை மறைக்க சண்டைபோடுபவர்கள் ஆண்கள்!

செய்தது தப்பே இல்லை என்று சண்டை போடுபவர்கள் பெண்கள்.

சில வீடுகளிலோகணவன் நிலை பரிதாபம். மனைவிக்கு அடங்கி நடத்தல் ஒன்றே அவனது தலையாயக்கடமையாக இருக்கும்.எந்த விஷயத்திலும், அவனது பேச்சை மனைவி ஒரு பொருட்டாகவே கருத மாட்டாள் தன் பேச்சுக்குக் கணவன் கட்டுப்பட வேண்டும் என எண்ணுவாள். வெளியில் புலியாக இருக்கும் ஆண்களில் பலர் வீட்டில் எலியாக மாறிவிடுவர். மிக்சர் பார்ட்டியாகவும் பல ஆண்களைக் காணலாம். மனைவி சொல்லே வேதம் என விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்ட தெய்வப்பிறவிகள் அவர்கள்.



சேவு.முத்துக்குமார்,
காரைக்குடி
94432 88931



எத்தகைய ஆண்களையும் அடக்கி ஆளும் வலிமை பெற்றவள் பெண், ஆனால் அவர்கள், தன்சக்தி என்னவென்று அறியாதவர்களாகவே இருக்கிறார்கள், உடல்பலம் கொண்ட ஆணுக்கு முன்னால் மனபலம் கொண்ட பெண்கள் அடங்கி விடுகிறார்கள். ஆனால் சில வீடுகளில் உடல்பலமும், மன பலமும் கொண்ட பெண்களையும் பார்க்க முடிகிறது.

அவர்களுக்கு முன்னால் ஆண்கள் என்றும் பெட்டிப்பாம்புகளே. ஒருவன் தன் மனைவியைப்பற்றிப் பெருமையாகக் கூறினான். தன் நண்பனிடம், என் மனைவி சிரிச்சா



மத்தாப்பூ; பேசினா சரவெடி சுறுசுறுப்புல சங்குசக்கரம் அப்ப நீ...நான் புஸ்வானம். என்னால ஒண்ணும் செய்ய முடியாது என்றான் வருத்தமாக...



அலுவலகத்தில் எல்லோரையும் அடக்கி வேலை வாங்கும் மேலாளரைப் பார்த்து, சிங்கம் மாதிரி அடக்குறீங்க சார் வீட்டில் எப்படி? ஊழியர் ஒருவர் கேட்டார். வீட்டிலும் நான் சிங்கம் தான். என்ன சிங்கத்தின் மீது துர்க்காதேவி சூலாயுதத்தோட உட்கார்ந்திருக்கும் என்றார் மேலாளர்.

பெண் சக்தி வடிவானவள். அவள் ஆணைவிட மனதால் வலிமை மிகக் கொண்டவள். அதை உணர்ந்து நடந்தாலே போதும். பெண்ணின் நாக்கு வாள் போன்றது. அதை அவள் எப்பொழுதும் துருப்பிடிக்க விடுவதேயில்லை. வாள் தவறாகப்பயன்படும்போது,விளைவுகள் கடினமாகும், அமைதி காத்தலே ஆனந்தம்.

எந்தக் காலத்திலும் மனைவியோடு வாய்ச்சண்டை போட்டுக் கணவனால் வெற்றி பெற முடியாது. ஆண்கள் இதை உணர்தல் அவசியம்.



- உன்னை யாரேனும் நிராகரித்தால் கவலை கொள்ளாதே. ஏனெனில், இந்த உலகில் விலையுயர்ந்த பொருட்களை வாங்க இயலாமல் நிராகரிப்பவர்களே அதிகம்.

– புத்தர்

# வாடகைத்தாய்

தசையும் குருதியும் சுமந்த
கருவும் தனதல்ல
வேதனை வலியுடன் ஈன்ற
சிசுவும் சொந்தமல்ல
கருவறைக்கு வாடகையா?
மேன்மையுரு மகப்பேற்றுக்கு
பணம் மட்டுமே ஈடா?
தாய்மை வரமிங்கு கொடுந்தழலினினும்
கொடிய வேதனையா?
இஃதென்ன பண்டமாற்று முறையா?
இல்லை பணம் செய்யும் வினையா?
கண்ணே மணியே ஆரமுதேயெனக்
கொஞ்ச வழியில்லை
பீறிவரும் முலைப்பால் சு(சு)வைக்க
பிஞ்சுக்கு விதியில்லை
சுமக்கும் நாட்களில் சுகமான
சொந்தம் உண்டு!
வளர்க்கும் உரிமை ஏழைத்தாயை
சேராது இங்கு !
தாய்மை என்பது வரமா
அல்லது சாபமா?
வாடகைத்தாயின் வலிதோய்ந்த
கேள்வி இது!
விடை அறிந்தவர் யாரிங்கே?
இவள் மனச்சுமை
தீர வழியெங்கே?




அரு. சிவகாமி இராமநாதன்
ஒக்கூர், நவிமும்பை



# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும்
அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை
இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

## குட்டி முயல்



குட்டி வெள்ளை முயலைப்பார்
... எட்டித் தாவி குதிக்கும்பார்
நெட்டைக் காதுக ளைப்பிடித்துத்
... தொட்டுத் தூக்கி அழகைப்பார்
வட்ட மிட்டுக் கண்களையும்
... சிட்டாய் உருட்டும் சிறப்பைப்பார்
கெட்டிக் கார முயலதுவும்
... விட்டால் ஓடும் வேகம்பார்!

## பப்பி என் நாய்குட்டி

பப்பி என்னும் நாய்குட்டி
... பாசக் கார நாய்குட்டி
எப்பொழு தும்என் சொல்கேட்கும்
... என்னுடன் நாளும் விளையாடும்
அப்பா கண்டால் பயந்துவிடும்
... அம்மா என்றால் வாலாட்டும்
தப்புகள் செய்வோர் பயந்தோட
... காதுகள் நீட்டிக் குரைத்திருக்கும்!



# பெண்கள் சமையலறையில்

## காலையில் எதை முதலில் சமைக்க வேண்டும்?



பெண்கள் காலையில் எழுந்து குளித்து முடித்துவிட்டு, சமையலறைக்கு சென்று சமைப்பார்கள்.

பெண்கள் காலையில் சமையலறைக்கு சென்றதும் எதை முதலில் சமைக்க வேண்டும்? சாஸ்திரம் என்ன சொல்கிறது. வாருங்கள் இந்தக் கட்டுரையில் காண்போம்

அதாவது சாதம், குழம்பு, ரசம், பொரியல், கூட்டு, சில பேரது வீட்டில் வளர்ந்து வரும் நவ நாகரீக சூழ்நிலைக்கு ஏற்ப பலகாரங்கள் கூட செய்யப்படும். அதாவது இட்லி, தோசை, பூரி, பொங்கல் இவைகள் கூட செய்யலாம்.



ஆனால் நம்முடைய பாரம்பரியப்படி அந்த காலங்களில் எல்லாம் நம் முன்னோர்கள் எந்த முறையை பின்பற்றி வந்தார்கள்?.

அதைத் தெரிந்து கொள்வதற்கு முன்பு, ஒரு சிறிய புராண கதை.

காரைக்கால் அம்மையாரை பற்றிய கதைதான் இது. இந்த காரைக்கால் அம்மையாரை பற்றி நம்மில் பலருக்குத் தெரிந்திருக்கும்.

சிவபெருமானை காண்பதற்கு கைலாயம் சென்றபோது, கைலாயம் என்பது சிவன் வசிக்கும் இடம்'. அந்த இடத்தை காலால் எப்படி மிதிப்பது? என்று, தன்னுடைய தலையால் நடந்து சென்று சிவபெருமானை தரிசனம் செய்த பெருமை இவருக்கு உண்டு. ஒருநாள் காரைக்கால் அம்மையாரது வீட்டிற்கு சன்னியாசி வேடத்தில் வருகை தந்தார் 'ஈசன்'.

அந்த காலங்களில் எல்லாம் பிக்ஷை கேட்டு வரும்

அடியார்களுக்கு எதுவும் இல்லை என்று சொல்லாமல் உபச்சாரம் செய்வது என்பது நம்முடைய பாரம்பரியமாக இருந்து வந்தது. அந்த சன்னியாசி பிக்ஷை கேட்டு வந்த அந்த நேரத்தில், காரைக்காலம்மையார் வீட்டில் வெறும் சாதம் மட்டுமே இருந்தது. சாதத்துடன் சேர்த்து இரண்டு மாம்பழங்களும் இருந்தன. சாதத்திற்கு குழம்பு எதுவும் இல்லாத நிலையில் என்ன செய்வது என்று தெரியாத அம்மையார், ஒரு பாத்திரத்தில் சாதத்தையும் மாம்பழத்தையும் மட்டும் போட்டு தன் வீட்டிற்குப் பிக்ஷை கேட்டு வந்த அந்த சன்னியாசிக்கு கொடுத்துவிட்டார்.

ஆனால் சன்னியாசி வேடத்தில் வந்திருக்கும் அந்த முனிவர் சிவன் தான், என்ற உண்மை காரைக்கால் அம்மையாருக்கு தெரியாது.

காலை வேலையில், வெறும் சாதத்தை மட்டுமாவது வடித்து வைத்திருந்ததால் தான், பசியோடு வந்த அடியாருக்கு தன் வீட்டில் இருந்த சாதத்தை மட்டுமாவது, காரைக்கால் அம்மையாரால், உணவாக தர முடிந்தது.



அன்று மட்டும் காரைக்காலம்மையார் முதலில் சாதத்தை வடிக்காமல், குழம்பு மட்டுமே வைத்திருந்தால் என்ன செய்திருப்பார்கள்? சிந்திக்க வேண்டிய விஷயம் தான் இது. காரைக்கால் அம்மையார் சிவபெருமானை சரண் அடைந்ததற்கு, இதுவும் ஒரு காரணமாக நம்முடைய சாஸ்திரத்தில் சொல்லப்பட்டுள்ளது.



இப்போது தலைப்பில் கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கான பதில், நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். இதோடு மட்டுமல்லாமல் காலையில் வடித்த சாதத்தோடு சிறிது நெய் சேர்த்து இறைவனுக்கு நைவேத்தியமாகப் படைக்கும் பழக்கத்தை நாம் வைத்துக்கொள்ள வேண்டும்.

காலையில் எழுந்ததும் நீங்கள் எதை வேண்டுமென்றாலும் சமைக்கலாம். ஆனால், அதையெல்லாம் சமைப்பதற்கு முன்பாக முதலில் சாதத்தை வடிக்கும் பழக்கத்தை வைத்துக்கொள்வோம். அந்த சாதத்தை நெய் விட்டு இறைவனுக்கு நைவேத்தியமாகப் செய்துவிட்டு, அதன்பின்பு அந்த நாளைத் தொடங்கிப் பாருங்கள். நிச்சயமாக வித்தியாசத்தை உங்களால் உணர முடியும்.

அந்த காலமாக இருந்தாலும், இந்த காலமாக இருந்தாலும், நம்முடைய சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கும் விஷயம் எதுவுமே பொய்யாகாது.எந்த ஒரு செயலையும் காரணமில்லாமல் நம் முன்னோர்கள் சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மரமே ..வரமே.. தருமே..!

மரங்கள் நிறைந்து எங்கும் இருந்ததால்
மழை இங்கு பொழிந்த வண்ணம் இருக்கும்

மழை நின்ற பின்னால் கண்ணீர் சிந்தும்
மரமே நமக்கு இரத்தச் சொந்தம்

மரங்கள் என்பது மழைக்கு அழைப்பிதழ்
முகிலிடம் உண்டு மழைநீர் சுரப்பிதழ்

பூமியில் மரங்கள் நமக்கு வரமாய்
இறந்த பின் மரமும் நற்காகிதமாய்

தென்றலின் மொழிக்கு செவிசாய்க்கும் மரங்கள்
புயலின் பசிக்கு இரையாகும் மரங்கள்

அசோகர் நட்ட மரங்கள் யாவும்
சாலை விரிவாக்கப் பணியில் மாயம்

மரங்களின் கிளைகள் கைகளை நீட்டும்
பறவைகள் வந்துக் கூடுகள் கட்டும்

மரம் போல் மனிதன் இருந்ததும் இல்லை
வாழையாய் தன்னைத் தந்ததும் இல்லை

தான் நின்ற போதும் நன்மை நினைக்கும்
நாற்காலி தந்து நம்மை அணைக்கும்

இத்தனை தந்த மரத்தை வெட்டுவான்
மரம் போல் நிற்காதே என்றும் திட்டுவான்.



கவிஞர் எம்.சோலை
காரைக்குடி .

நம் நகரத்தார்

## முல்லைப்பதிப்பகம்
## திரு.மு.பழநியப்பன்

தாம் சார்ந்த அனைத்து துறைகளிலும் முத்திரை பதிப்பவர்கள் நம் நகரத்தார்கள். பதிப்புத் துறையிலும், இதழியல் துறையிலும் நகரத்தார்களின் பங்கு அளப்பரியது. பதிப்பகங்கள் வாயிலாக நகரத்தார்கள் தமிழுக்கு பெருந் தொண்டாற்றி வந்தனர். நூல் வெளியீட்டைத் தொழிலாகச் செய்யாமல் தொண்டாகச் செய்தவர்கள் நகரத்தார்கள். விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய எழுச்சியை உருவாக்கிய புத்தகங்களை வெளியிட்டப் பதிப்பகங்களில் பெரும்பாலனவை நகரத்தார் நடத்தி வந்த பதிப்பகங்கள்தான்.


'முல்லை' பதிப்பகத்தின் நிறுவனர் முல்லை முத்தையா, 'தமிழ்ப் பண்ணை'யின் சின்ன அண்ணாமலை, 'பாரி நிலைய'த்தின் செல்லப்பன், 'பழனியப்பா பிரதர்ஸ்' பதிப்பகத்தின் நிறுவனர்பழனியப்பா செட்டியார், ஆகிய இந்த நால்வரும் நூற்றாண்டு கண்டவர்கள். இதுவே நகரத்தார்களாகிய நமக்கு பெருமை சேர்க்கும் ஒன்றாகும். நகரத்தார்கள் காலத்திற்கு ஏற்ப பதிப்புத் துறையின் வளர்ச்சியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு வெற்றிக்கொடி நாட்டி வருகிறார்கள்.



**இந்த இதழில் தந்தைவழியில் தடம்பதிக்கும் முல்லைப்பதிப்பகம் திரு.மு.பழநியப்பன் அவர்களோடு நமது நாம் நகரத்தார் மின்னிதலுக்காக ஒரு நேர்காணல்!**

நேர்காணல்:
கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா

தமிழர்களின் உள்ளங்களில் நிறைந்தும்,நிலைத்தும் நிற்பவர் முல்லைப் பதிப்பகத்தை தோற்றுவித்த தேவகோட்டை திரு.முல்லை முத்தையா அவர்கள். தமிழகத்தில் நூற்றாண்டு கண்ட பதிப்பக முன்னோடிகளில் சிறந்து விளங்குபவர் திரு.முல்லை முத்தையா அவர்கள். வருகின்ற ஜூன் திங்கள் 7ஆம் நாள் திரு.முல்லை முத்தையா அவர்களின் 104ஆவது பிறந்த நாளாகும். பதிப்பாளர் என்பதைத் தாண்டி, தன்னை ஒரு எழுத்தாளராக,பேச்சாளராக,மொழிபெயர்ப்பாளராக, தொகுப்பாளராக வெளிக்காட்டியவர்.



பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகள் மீது காதல் கொண்ட காரணத்தால் அவரது நண்பரானவர். அவருடைய புத்தகங்களை வெளியிட வேண்டும் என்பதற்காகவே முல்லைப்பதிப்பகத்தை தொடங்கியவர். எழுத்தாளர்களை ஆதரித்தவர்.பதிப்புத்துறையில் சிறந்து விளங்கிய நேர்மையாளர். பல்வேறு விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

அவரது முல்லைப்பதிப்பகத்தை இன்றைக்கு மிகச்சீரோடும் சிறப்போடும் நடத்தி வருகின்ற அவரது மகன் திரு.மு.பழநியப்பன் அவர்களை,நாம் நகரத்தார் மின்னிதழுக்காக, தமிழகத்தின் தலைநகர் சென்னையின் முக்கியப் பகுதியான அண்ணாநகர் மேற்கிலுள்ள கதிரவன் காலனியில் அமைந்துள்ள முல்லைப்பதிப்பகத்தின் அலுவலகத்தில் திரு.மு.பழநியப்பன் அவர்களைச் சந்தித்தேன்.

எளிமையின் வடிவமாகவும், நேர்மையின் அடையாளமாகவும், சிந்தனையில் தெளிவாகவும் விளங்கிய திரு.மு.பழநியப்பன் அவர்கள் நான் கேட்ட கேள்விகள் அனைத்திற்கும், அமைதியாகவும், அடக்கமாகவும், உறுதியாகவும்

பதில் அளித்த பாங்கு கண்டு மலைத்துபோனேன். நேர்காணலைப்படியுங்கள்! உங்கள்நெஞ்சில் நிற்கும் கருத்தை மறக்காமல் பதிவு செய்யுங்கள்!

**முல்லைப்பதிப்பகத்தின் தோற்றம் குறித்து வாசகர்களுக்கு சற்று கூறுங்களே!**

முல்லைப்பதிப்பகம் சென்னையில் 1944ஆம் ஆண்டு, எனது தந்தை தேவகோட்டை முல்லை முத்தையாச்செட்டியார் அவர்களால் தொடங்கப்பட்டது. பாவேந்தர் பாரதிதாசனின் நூல்களை தமிழர்கள் வாசிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவே தொடங்கப்பட்டது தான் முல்லைப்பதிப்பகம் என்பது கூடுதல் சிறப்பு.

**தங்கள் தந்தையார் முத்தையா அவர்களின் இளமைக்காலம்,கல்வி பற்றி கூறுங்களே!**



என் தந்தையார் தேவகோட்டையில் பிறந்து வளர்ந்தவர்கள். அங்குள்ள பள்ளியில்உயர்நிலைக் கல்விவரை படித்தவர்கள். அக்கால நகரத்தார் வழக்கப்படி,கணக்கு எழுதி, தொழில் பழகுவதற்காக பர்மாவுக்குச்சென்றார்கள். பர்மாவின் மீது போர் தொடுக்கப்பட்டதால்,நீண்ட நாட்கள் என் தந்தையார் அங்கு வாழ முடியவில்லை. போர் தீவிரமடைந்த காரணத்தால்,ஆயிரக்கணக்கானோர் பர்மாவில் இருந்து நடைப்பயணமாக இந்தியாவுக்கு வந்தனர். அவர்களோடு நடந்தே இந்தியாவந்து,பின் சென்னைக்கு வந்து சேர்ந்தார் என் தந்தையார். என் தந்தையாரோடு நடைப்பயணத்தில் உடன் வந்தவர்கள்,திரு.பாரி. செல்லப்பன்,தமிழ்ப்புத்தகலாயம் திரு.கண.முத்தையா எழுத்தாளர்திரு.வெ. சாமிநாத சர்மா ஆகியோர் ஆவர். இவர்கள் மூவரும் தந்தையாரோடு நல்ல நண்பர்களாக விளங்கியவர்கள்.

**தங்கள் தந்தையாருக்கும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கும் இடையே இருந்த நட்புப்பற்றி சற்று விளக்குங்களேன்!**

என் தந்தையாருக்கு தமிழின் மீதும்,தமிழ் மொழியின் மீதும் அளவுக்கு அதிகமான பற்று உடையவர்கள். கவிதைகளில்



அவர்களுக்கு விருப்பம் அதிகம். பாரதிதாசனின் கவிதைகளில் நாட்டம் கொண்டவர்கள். புதுச்சேரியில் வாழ்ந்து கொண்டிருந்த பாரதிதாசன் அவர்களைப்பார்த்து உரையாடி மகிழ்வதற்காகவே அடிக்கடி புதுச்சேரி சென்று வருவார்கள்.அவரது நூல்களை வெளியிட வேண்டும் என்பதற்காகவே முல்லைப்பதிப்பகத்தை தொடங்கி,அதன்மூலம், பாரதிதாசனின் பாண்டியன் பரிசு,குடும்பவிளக்கு, பாரதிதாசன் கவிதைகள் உட்பட 12 நூல்களை வெளியிட்டார்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களும் என் தந்தையாரோடு நட்போடும்,பாசத்தோடும் பழகினார்கள். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் புதுச்சேரியில் வாழ்வதற்காக,அன்றைக்கு ரூபாய் 4,000/- கொடுத்து ஒரு வீடு ஒன்றை என் தந்தையார் வாங்கிக் கொடுத்தார்கள். அந்த வீடுதான்,புதுச்சேரியில் தற்பொழுது அரசு அருங்காட்சியகமாக உள்ளது.

1946ஆம் ஆண்டு பாவேந்தரின் 54ஆவது பிறந்தநாளின் போது, புரட்சிக்கவிஞர் என்ற தொகுப்பு நூல் ஒன்றை என் தந்தையார் தொகுத்து வெளியிட்டார்கள்.

அந்தத்தொகுப்பு நூலில்,பாரதிதாசனோடு கருத்துமாறுபாடு கொண்டவர்களும்,பாவேந்தர் பற்றிய சிறப்புகளை கட்டுரையாக வழங்கி இருந்தார்கள் என்றால்,என்தந்தையார் அவர்களின் முயற்சியும் நட்புமே காரணமாகும்.

புரட்சிக்கவிஞர் என்னும் இந்தத்தொகுப்பு நூலே, தமிழில் வெளிவந்த முதல் தொகுப்பு நூல் என்று தனது வளரும் தமிழ்என்ற நூலில் பதிவு செய்துள்ளார் உலகம் சுற்றிய தமிழர் திரு.சோமலெ அவர்கள்.

**முல்லைப்பதிப்பகம் தொடங்குவதற்கு முன்பு உங்கள் தந்தையார் ஈடுபட்ட தொழில் என்ன?**

முல்லைப்பதிப்பகம் தொடங்குவதற்கு முன்பு அவர்கள் தொழில் எதுவும் செய்யவில்லை. கணக்கு எழுதும் வேலைக்காக பர்மா சென்று சில ஆண்டுகள் வேலை பார்த்தார்கள்.

**முல்லைப்பதிப்பகம் என்ற பெயர் வைத்தது யார்?**

பர்மாவில் இருந்து வந்த பிறகு,பதிப்பகம் தொடங்கலாம் என எண்ணிய என் தந்தையார், கமலா பிரசுராலயம் என்ற பெயரில் தொடங்கி சில நூல்களை வெளியிட்டார். பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் நூல்களை வெளியிட முயன்ற போது,பாரதிதாசனுக்கு முல்லை மலர்என்றால் மிகவும் பிடிக்கும்.

அவரது கவிதைகளில் பல இடங்களில் முல்லை மலர் இடம்பெற்றுள்ளது. தனது நூல்களை வெளியிடப் போகும் பதிப்பகத்திற்கும் முல்லைப்பதிப்பகம்என்ற பெயரே திகழட்டும் என்று பெயர் வைத்தவரே பாரதிதாசன் அவர்கள் தான். பதிப்பகம் தொடங்கிய பின்பு,பாரதிதாசன் அவர்களின் ஆதரவோடு முல்லை என்ற பெயரில் இலக்கிய மாத இதழ் ஒன்றையும் தந்தையார் மிகச்சிறப்பாக நடத்தி வந்தார்கள்.

**உங்கள் தந்தையார் சிறந்த பதிப்பாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார்கள். அவர்கள் எழுதிய முதல் நூல் எது?**

என் தந்தையார் முல்லை முத்தையா அவர்கள், 1946ஆம் ஆண்டு தாழ்வு மனப்பான்மை என்ற தலைப்பில் முதல் நூலை எழுதி வெளியிட்டார்கள். அந்த நூலுக்கு, கலைவாணர் திரு.என்.எஸ்.கே. அவர்கள்,மிகச்சிறப்பான அணிந்துரை ஒன்றை எழுதி வழங்கினார்கள்.

**தந்தையாரின் முதல் நூலுக்கு கிடைத்த மிகப்பெரிய மரியாதையாக அந்த அணிந்துரை விளங்கியது. தங்கள் தந்தையார் எத்தனை நூல்கள் எழுதியுள்ளார்?**

பதிப்பாளர் என்பதைவிட என் தந்தையார் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதை தமிழகம் நன்கு அறியும். தமிழ்மொழியின் மீது கொண்ட காதலால், 300 புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளார்கள். ஒரு பதிப்பாளர் எழுத்தாளராக மாறி இவ்வளவு நூல்கள் எழுதிய ஒருவர் என் தந்தையாரைத்தவிர வேறு யாரும் இருப்பதாகத் தெரியவில்லை.



**தங்கள் தந்தையாரோடு நெருங்கிப்பழகிய பிரபலமான எழுத்தாளர்கள் யார் யார்?**

எல்லோரையும் தன்னுடைய நண்பர்களாகக் கருதிப்பழகும் இயல்பு கொண்ட என் தந்தையாரோடு நெருக்கமான நட்புக்கொண்டோர், திரு.வ.ரா,திரு.தி.ஜ.ரா., திரு.ராஜாஜி, திரு.பாரதிதாசன், திரு.அறிஞர் அண்ணா, திரு.கலைஞர்,திரு.கவியரசு கண்ணதாசன்,திரு.பி.ஸ்ரீ. திரு.கம்பதாசன், திரு.புதுமைப்பித்தன், திரு.க.நா.சு.,திரு.நாரண துரைக்கண்ணன் ஆகியோர்.

**தங்கள் தந்தையார் பெற்ற விருதுகள் பற்றிச் சொல்லுங்களோ?**

தமிழக அரசால் வழங்கப்படும் பாவேந்தர் விருது,திருக்குறள் நெறித்தோன்றல் விருது,சென்னைக் கம்பன்கழக விருது ஆகியவை குறிப்பிடத் தகுந்த விருதுகளாகும். பல்வேறு அமைப்புகள் வழங்கிய பத்துக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றுள்ளார்கள் என் தந்தையார் அவர்கள்.



**முல்லைப்பதிப்பகம் வெளியிட்டுள்ள நூல்களில் அதிக விற்பனையாகும் நூல்கள் எவை எவை?**

எங்களின் வெளியீடுகள் பலவும் பல பதிப்புகளைக் கண்டு விற்பனையாகி வருகின்றன. அருளும் பொருளும் தரும் அஷ்டலஷ்மிஎன்னும் நூல் பதினைந்து பதிப்புகள் கண்டு அமோகமாக விற்பனையாகி வருகிறது. காமசூத்திரம்என்னும் நூல் பன்னிரண்டு பதிப்புகள் கண்டு இன்றும் விற்பனையாகிவருகிறது.




**முல்லைப்பதிப்பகம் இந்த இடத்தில்தான் தொடங்கப்பட்டதா?**

இல்லையில்லை, சென்னையில்,59,பிராட்வேயில் தான் முதன் முதலில் தொடங்கப்பட்டது. பின்பு சில ஆண்டுகள் மயிலாப்பூரில் இயங்கியது. அதன்பின்,அண்ணாநகரில் எம்.ஜி.ஆர். ஆட்சியில் வீட்டுவசதித்துறையால் கட்டப்பட்ட குடியிருப்பில், அந்தத்துறையின் அமைச்சராக விளங்கிய திரு.நல்லுசாமி அவர்களின் உதவியால் ஒதுக்கப்பட்ட வீட்டை, அன்றைய அரசாங்கத்தின் மதிப்பீட்டைக்கொடுத்து வாங்கினோம்.

அன்றுமுதல்அண்ணாநகரிலேயே முல்லைப்பதிப்பகம் தொடங்கி, இன்றுவரை இயங்கி வருகிறது.

**உங்கள் தாய் மற்றும் உடன் பிறந்தோர் பற்றி சொல்லுங்களேன்?**

என் தாயார் பெயர் நாச்சம்மை.என் தாயார் பிறந்த ஊர்

புதுவயல். என் தந்தையாருக்கு இரண்டாம் தாரமாக வந்தவர்கள் என் தாயார். என் தந்தையாருக்கு முதல் தாரமாக வந்தவர்களுக்கு குழந்தைப்பேறு வாய்க்கவில்லை என்பதால், என் தந்தையார் மறுமணம் செய்து கொண்டார்கள். என் தந்தையாருக்கு நாங்கள் மொத்தம் ஆறு குழந்தைகள். மூவர் ஆண்கள்,முவர் பெண்கள். மூத்த ஆச்சி வீட்டில் குடும்பத்தலைவியாக வாழ்ந்து வருகிறார்கள். தங்கை கலா சொக்கலிங்கம் அவர்கள்,வள்ளியம்மாள் பள்ளியில் நூலகராகப் பணியாற்றுகிறார். இன்னொரு தங்கை உமா வெங்கடாஜலம் அவர்கள்,லியோ மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நூலகராகப் பணியாற்றுகிறார். தம்பி இராமன் அவர்கள்,னிறூனில் காசாளராகப் பணியாற்றுகிறார். இன்னொரு தம்பி கருப்பையா அவர்கள் பொன்னேரியில் ஓட்டல் நடத்தி வருகிறார்.

1986இல் நான் எம்.ஏ. முதுகலைப்படிப்பை முடித்தவுடன்,என்னை அழைத்த என் தந்தையார், இனி நீ நம்முடைய முல்லைப்பதிப்பகத்தின் பணிகளை தொடர்ந்து செய் என்று சொன்னார்கள். அவர்களின் கட்டளைப்படி பதிப்பகத்தின் பொறுப்பை ஏற்று இது வரை சுமார் 300 புத்தகங்களை புதிதாக வெளியிட்டுள்ளேன்.

**உங்கள் தந்தையின் நூற்றாண்டு விழாவை எப்படிக் கொண்டாடினீர்கள்?**




புகழ்பெற்ற சாகித்திய அகாடமியுடன்இணைந்து, எங்கள் தந்தையின் நூற்றாண்டு விழாவினை ,சென்னை தி.நகரிலுள்ள எஸ்.எஸ்.ஜெயின் கல்லூரியில் நடத்தினோம்.

விழாவில் புகழ்பெற்ற பேச்சாளர்கள் கலந்து கொண்டு,என் தந்தையார் முல்லை முத்தையாவின் பன்முக ஆற்றலை பாராட்டிப்பேசினார்கள். திரு. முல்லை முத்தையா அவர்களின் நுற்றாண்டு நினைவை முன்னிட்டு, கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்தினோம்.போட்டியில் ஆர்வத்தோடு பலரும் கலந்து கொண்டார்கள். போட்டியில் வெற்றி பெற்றோர்க்கு பரிசாக நூல்களை வழங்கிச் சிறப்பித்தோம்.



முல்லை முத்தையா அவர்களின் நினைவாக நூற்றாண்டு மலரினை பதிப்பித்தோம். அந்த நூற்றாண்டு மலரை தமிழகத்தின் முதல்வர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டு, எங்களைப்பெருமைப் படுத்தினார்கள்.

சாகித்ய அகாடமி வெளியிட்டு வரும், இந்திய இலக்கியச்சிற்பிகள் வரிசையில்,என் தந்தையார் முல்லை முத்தையா பற்றிய நூல் ஒன்று வெளிவந்தது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. பதிப்புத்துறை நால்வர் நூற்றாண்டு நூற்றாண்டு கண்ட பதிப்பக முன்னோடிகள் என்ற தொகுப்பு நூலையும் வெளியிட்டு மகிழ்ந்தோம்.

**பதிப்பகத்தொழில் இன்றைய நிலையில் லாபகரமாக நடைபெறுகிறதா?**

இன்றையநிலையில் பதிப்பகத்தொழிலில் கண்டிப்பாக லாபம் என்பதே இல்லை.

**லாபம் இல்லாத சூழ்நிலையில் உங்கள் பதிப்பகம் வெளியிடும் நூல்களுக்கு வரவேற்பு உள்ளதா?**

பத்திரிக்கைகளின் ஆதரவும், வாசகர்களின் வாசிப்பும்,வரவேற்பும் இருப்பதால் மட்டுமே,லாபம் அதிகம் இல்லை யென்றாலும்,இத்தனை ஆண்டுகள் தொடர்ந்து பலநூல்களை வெளியிட முடிந்தது.

**புத்தக வாசிப்பை ஊக்கப்படுத்த என்ன செய்யலாம்?**

பல்லாண்டுகளுக்கு முன்பு,நாமெல்லாம் பள்ளி,கல்லூரிகளில் படிக்கும் பொழுது தமிழ் ஒரு பாடமாக கட்டாயம் இருந்தது. அறிவியல், வரலாறு போன்றவைகளையும் தமிழிலேயே படித்தோம். ஆனால் தற்சமயம் தமிழே படிக்காமல்



கல்லூரி படிப்புவரை படித்து முடிக்கலாம் என்ற நிலை உள்ளது. இதனை மாற்றி தமிழைக் கட்டாயம் படிக்க வேண்டும் என்று அரசு சட்டம் இயற்றினால், இளைஞர்கள் மத்தியில் தமிழ் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை மீண்டும் உருவாக்க முடியும்.

**பதிப்பாளர்களுக்குத் துணையாக அரசாங்கம் உள்ளதா?**

தற்பொழுது, அரசாங்கம், நூலகத்திற்காக புத்தகங்கள் வாங்கும் ஆர்டரை தீடீர் என்று, ONLINE வழியாக வாங்குவது என்று மாற்றி விட்டார்கள். தேர்தலில் பணம் உள்ளவர்கள்

தான் M.L.A. ,M.P.க்கு நிற்க முடியும் என்பதைப்போல,பணம் உள்ளவர்கள் தான் புத்தகங்கள் போட்டு விற்க முடியும்.ஏழை மற்றும் நடுத்தர வசதி கொண்ட எழுத்தாளரோ அல்லது பதிப்பாளரோ புத்தகங்களைப்பதிப்பித்து,முன்புபோல அரசாங்கத்திடமிருந்து நூலகத்திற்கான ஆர்டர்களைப்பெற முடியாது. அரசாங்கம் பதிப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு ஆதரவாக இருந்தாலும், அரசு அதிகாரிகள் ஆதரவாக இல்லை.



**பதிப்பகத்தொழில் சிறந்து விளங்க என்ன செய்ய வேண்டும்?**

தரமான நூல்களை, சிறப்பான எழுத்தாளர்களை எழுத வைத்து,சமூகத்திற்கு பயன்படும் வகையில், பிழைகள் இல்லாத புத்தகமாக வெளியிட முயற்சி மேற்கொள்ள வேண்டும். பதிப்பகத் தொழிலில் நேர்மையும், உண்மையும் முக்கியம். போட்டிக்காக தரமில்லாத நூல்களையோ,அல்லது அடுத்தவர்கள் உருவாக்கிய புத்தகங்களை அப்படியே காப்பி செய்து வெளியிடுவதோ கூடவே கூடாது.அடுத்தவர் உழைப்பை திருடுதல் குற்றமாகும்.

**மேலை நாடுகளில் வெளிவரும் புத்தகங்களின் தரத்தில் தமிழ்நூல்கள் எப்போது வெளிவரும்?**




வெளிநாட்டில் வெளிவரும் புத்தகங்களின் தரத்திற்கு இணையாக இங்கும் புத்தகங்கள் வெளியிட முடியும். ஏற்கனவே நல்ல தரத்தோடும்,வடிவமைப் போடும் நமது தமிழ் புத்தகங்கள் வெளி வரத்தான் செய்கின்றன. விலை அதிகம் இருந்தால் இங்கே புத்தகங்கள் விற்பனையாவதில்லை. மேலை நாடுகளில் விலை

ஒரு பொருட்டேயில்லை. அதிலுள்ள விஷயம்தான் முக்கியம். தமிழர்கள் விலை குறைவான புத்தகங்களையே தேடி வாங்குவதை பழக்கமாக்கி கொண்டுவிட்டார்கள். இத்தகைய காரணங்களால் தான் வெளிநாட்டுப் புத்தகங்களைப்போல நூல்கள் அதிகமாக இங்கே வெளியிட முடியவில்லை.

**திரு.முல்லை முத்தையா அவர்களைப்போல பதிப்பகத்தொழில் சிறந்த ஈடுபாடு கொண்டுள்ள அவரது திருமகன் முல்லைப்பழநியப்பன் அவர்களோடு உரையாடிய நேர்காணலில் பல மணி நேரம் எப்படிப்போனது? என்ற வியப்போடும், பல்வேறு செய்திகளை அறிந்துகொண்ட மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் வாழ்த்துக்களைத் தெரிவித்து விடைபெற்று வந்தேன்.**

## பொன்னான புத்தர் மொழிகள்...!



- அதிகமாக பேசுவதால் மட்டும் ஒருவன் அறிஞனாகிவிட மாட்டான்.
- எதை நீ அதிகம் விரும்புகிறாயோ அதுவே உன்னை அதிகம் காயப்படுத்தும்.
- இவ்வுலகில் வேரில்லாமலும் நீரில்லாமலும் வளரக்கூடிய ஒரே செடி 'ஆசைதான்'.




# செட்டிநாட்டு ஐந்தரிசி பணியாரம்



**தேவையான பொருட்கள் :**

- பச்சரிசி – 1 கப்
- புளுங்கல் அரிசி –1/2 கப்
- கடலைப் பருப்பு – 1/4 கப்
- பாசிப் பருப்பு – 1/4 கப்
- உளுத்தம் பருப்பு – 1/4 கப்
- வெந்தயம் – 1/4 தேக்கரண்டி
- தேங்காய் – 1/2 மூடி
- வெல்லம் – 2கப்
- ஏலக்காய் – 5
- எண்ணெய் பொரிப்பதற்கு

**செய்முறை:–**

- அரிசி,பருப்பு, வெந்தயத்தை நன்றாகக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைக்கவும் .
- வெல்லத்தை டிகப் தண்ணல் சேர்த்துக் கரையும் வரை காய்ச்சி வடிகட்டிக் கொள்ளவும் .
- அரிசி, பருப்பை கிரைண்டரில் சேர்த்துக் கொஞ்சம் ஆட்டியதும் தேங்காய், ஏலக்காய் சேர்த்து ஆட்டிக் கொள்ளவும்.
- பின் காய்ச்சி ஆற வைத்த வெல்லப் பாகை சேர்த்து மாவை கொஞ்சம் கெட்டியாக ஆட்டி எடுத்துக் கொள்ளவேண்டும்.
- மாவை அரைத்த பின் அதனை தோசை மாவு பதத்துக்கு கரைத்துக்கொள்ளவும் .
- வாணலியில் எண்ணெயை சூடாக்கி, மாவை வட்டமாக ஊற்றி, ஒருபுறம் வெந்ததும் திருப்பிப் போட்டு, மறுபுறம் வேகவிடவும். ஒவ்வொன்றாக போட்டு, பொன்னிறமாகும்வரை வேகவிட்டு எடுக்கவும். தீயை மிதமாகத்தான் எரியவிட வேண்டும்.

பொறுமையாக செய்தால், சூப்பர் சுவையில் அசத்தும் இந்த ஐந்தரிசி பணியாரம்.






– விஜயலெட்சுமி செந்தில்நாதன்
கொத்தமங்கலம்

இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். ஆச்சிகள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்



# முழு உடலையும் காக்கும் முள்ளங்கி

குளிர்காலம் வந்துவிட்டால், மார்க்கெட்டில் அதிக அளவு முள்ளங்கி கிடைக்கும். ஃபிரஷான முள்ளங்கியை சாம்பார், சாலட், ஊறுகாய், பச்சடி போன்ற பல வகையான உணவுகளில் பயன்படுத்துகிறோம். இவை சுவை மிகுந்த ஆரோக்கியமான காய்கறிகளில் ஒன்றாகும்.

முள்ளங்கிக் கிழங்கின் இலை, கிழங்கு, விதை முதலியவை மருத்துவத்தன்மை நிறைந்தவை.

இவற்றை உட்கொண்டால் உடல் முழுவதும் சுத்தமான இரத்தம் எப்போதும் பாய்ந்தோடிக் கொண்டிருக்கும். மூன்றாம் நூற்றாண்டில் இதன் பயன்பாடு இருந்ததாக, வரலாற்றுப் பதிவுகளால்அறிய முடிகிறது.

மேற்கு ஆசியாவைத் தாயகமாகக் கொண்ட முள்ளங்கிக்கிழங்கின் தாவர விஞ்ஞானப் பெயர்,

ராப்ஹான்ஸ் சாட்டிவஸ் (தாவர வகைப்பாடு : **Raphanus sativus**) என்பதாகும். பண்டைக்காலத்தில் எகிப்து, கிரீஸ், ரோம் போன்ற

நாடுகளில் முள்ளங்கி அதிகம் பயிர் செய்யப்பட்டுள்ளது.

தற்போது இந்தியா, இலங்கை உட்பட உலகில் உள்ள வெப்பமண்டலப் பிரதேச நாடுகள் அனைத்திலும் முள்ளங்கிக் கிழங்கு நன்கு பயிர் செய்யப்படுகிறது.

***முள்ளங்கியின் ஊட்டச்சத்து மதிப்பு:***




100 கிராம் முள்ளங்கிக் கிழங்கில் ஈரப்பதம் 9.4%ம் மாவுச்சத்து, 3%ம் உள்ளது. மீதியில் சிறிதளவு புரதம், கொழுப்பு, தாதுஉப்புகள், நார்ச்சத்து முதலியவை உள்ளன. வைட்டமின் சி வைட்டமின் பி காம்ப்ளக்ஸ் ஆகியவற்றுடன் இரும்புச்சத்தும் (0.4 மில்லி கிராம்), கல்சியமும் (35 மில்லி கிராம்), பாஸ்பரஸும்(22 மில்லிகிராம்) இருக்கின்றன. இதனால் கிழங்கைப் பச்சையாகவோ சாறாகவோ உணவில் சேர்த்துக்கொண்டால் நன்மைகள் அதிகம் கிடைக்கும்.

முள்ளங்கி, நம் ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியத்திற்கும் நன்மை தரும். முள்ளங்கியின் நன்மைகள் மற்றும் பக்க விளைவுகள் குறித்து இந்தக் கட்டுரையில் அறிந்து கொள்வோம்.

***முள்ளங்கியின் நன்மைகள்:***

பின்வருவன, முள்ளங்கியின் ஆரோக்கிய நன்மைகளாகும். அவை: **காய்ச்-சலைக் குறைக்கிறது** (Reduces fever): காய்ச்சல் உடல் வெப்பநிலையை அதிகரிக்கிறது. முள்ளங்கியில் உள்ள ஊட்டச்சத்து கூறுகள் வெப்பநிலையைக் குறைக்கப் பயன்படுகிறது. முள்ளங்கி





தலைவலிக்கு பயனுள்ளதாக அமைகிறது. காய்ச்சலைக் குறைக்க நோயாளிகள் அதிக அளவில் தண்ணீர் குடிக்க, மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- **நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துகிறது**

(Controls Diabetes): முள்ளங்கி நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை பயக்கிறது. ஏனெனில், இது இன்சுலின் உற்பத்தியை அதிகரிக்கும் இரத்த சர்க்கரை அளவைக் குறைக்கிறது. நீரிழிவு நோயாளிகள் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முள்ளங்கியுடன், முள்ளங்கி இலைகளையும் உட்கொள்ள, மருத்துவர்களால் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

- **முடியின் தரத்தை மேம்படுத்துகிறது** (Enhances hair quality):

தலை முடியை வலுவானதாக மாற்ற முள்ளங்கி சாப்பிட வேண்டும். முள்ளங்கி சாறு முடி உதிர்தலைக் குறைக்க பயனுள்ளதாக அமைகிறது. முள்ளங்கி சாற்றைக் கொண்டு தலைமுடியில் மசாஜ் செய்து சுமார் 15 முதல் 20 நிமிடங்கள் கழித்து கழுவவும். இந்த, செயல்முறையை வாரத்திற்கு இருமுறை செய்வதன் மூலம் கூந்தலின் வேர்களை பலப்படுத்த இயலும். இதனால், அவை வலிமையாகவும் பளபளப்பாகவும் மாறுகின்றன.

- **மஞ்சள் காமாலைக்கு சிகிச்சையளிக்கிறது** (Treats jaundice):

முள்ளங்கியின் ஊட்டச்சத்து முக்கியத்துவம் காரணமாக, மஞ்சள் காமாலைக்கு சிறந்த சிகிச்சையளிக்க முள்ளங்கி பயனுள்ளதாக

அமைகிறது, என நிபுணர்கள் கருதுகின்றனர். மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் முள்ளங்கி இலைகளை உட்கொள்ள வேண்டும். இது நோயின் அறிகுறிகளைக் குறைக்க உதவுகிறது. மஞ்சள் காமாலை நாள்பட்ட காய்ச்சலால் ஏற்படுகிறது.

முள்ளங்கியில் உள்ள வைட்டமின் சி தொற்றுநோயைக் குறைக்கிறது. மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்துகிறது.

- **சரும அமைப்பை மேம்படுத்துகிறது** (Enhances skin the texture):

முள்ளங்கியிலுள்ள நீர் சருமத்தின் ஈரப்பதத்தை பராமரிக்கிறது மற்றும் சுருக்கங்களைத் தடுக்கிறது. முள்ளங்கி விதைகளில் தயிரை கலந்து பேஸ்ட் தயாரிக்கவும். இதனை, சருமத்தில் பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான சருமத்தை பராமரிக்க இயலும். இந்த பேஸ்டை முகத்தில் பயன்படுத்துவதன் மூலம் கரும்புள்ளிகள் மற்றும் முகப்பருவை குறைக்க முடிகிறது. முள்ளங்கியிலுள்ள வைட்டமின் சி மற்றும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் சருமத்தைப் பராமரிக்க முதன்மையாக பயன்படுகின்றன.

- **உடல் எடையைக் குறைக்கிறது** (Reduces body weight):

முள்ளங்கியிலுள்ள நார்ச்சத்துகள் உடல்எடையைக் குறைக்க உதவுகின்றன.

மேலும், செரிமானத்தை மேம்படுத்துகின்றன. இருதயத்தை காக்கக்கூடியவை: பெரும்பாலும், அந்தோசயினின்கள் அதிகமுள்ள உணவுகள் இதயத்தை காக்கக்கூடியவை. அந்தவகையில், சிவப்பு நிற முள்ளங்கியில் அந்தோசயினின்கள் நிறைய உள்ளன.. இதனால், இருதய நோய்களும் குறையும்.. ரத்த அழுத்தம் உள்ளவர்கள் அதிகம்



உணவில் சேர்த்துக் கொள்ளக்கூடிய தவிர்க்க முடியாத கிழங்கு இந்த முள்ளங்கி.

***முள்ளங்கியின் பக்க விளைவுகள் :***

முள்ளங்கி பல நன்மைகளைக் கொண்டுள்ளது. எனினும், சில சமயங்களில் இது சில பக்க விளைவுகளை ஏற்படுத்தக்கூடும், அவை:

- முள்ளங்கியின் கட்டுப்பாடற்ற நுகர்வு வயிற்று வலிக்கு வழிவகுக்கிறது.
- முள்ளங்கியுடன் உளுந்தைச் சேர்த்து எடுத்துக் கொள்ளக் கூடாது.
- பால் குடித்தபின் முள்ளங்கியை உட்கொள்ள வேண்டாம்.
- முள்ளங்கியை மீனுடன் சேர்த்து சாப்பிட வேண்டாம்.
- முள்ளங்கியின் அதிகப்படியான நுகர்வு பசியின்மை, தொண்டை புண் மற்றும் தசைப்பிடிப்பை ஏற்படுத்தக்கூடும்.
- கர்ப்பிணி பெண்கள் முள்ளங்கி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

முள்ளங்கியை பார்த்து வாங்குவது எப்படி?

முருங்கையை முறுக்கியும், தேங்காயை தட்டி பார்த்தும் வாங்க வேண்டும்,



***தெரிந்துகொள்வோம் வாருங்கள் :***

முள்ளங்கி ஃபிரஷாக இருந்தால் மட்டுமே அது ருசியாக இருக்கும். சில நேரங்களில் கசப்பான முள்ளங்கி நம் உணவின் சுவையைக் கெடுத்துவிடும்.

அதனால் தான் முள்ளங்கியை மிகவும் கவனமாகத் தேர்ந்தெடுத்து வாங்க வேண்டும். நல்ல முள்ளங்கியைத் தேர்ந்தெடுப்பது சற்று கடினமாக இருந்தாலும், சில விஷயங்களைக் கவனத்தில் வைத்துக் கொண்டால், தரமற்ற முள்ளங்கி வாங்குவதைத் தவிர்க்கலாம். நாம் முள்ளங்கி வாங்கும்போது அதன் எடை, நிறம் போன்றவற்றில் கவனம் செலுத்த வேண்டும். இதை பற்றி விரிவாகப் பார்க்கலாம்.

முள்ளங்கி இலைகள் புதியதாக இருக்க வேண்டும். முள்ளங்கியை வாங்கும் முன் நாம் அதன் இலைகளை சரிபார்க்க வேண்டும். அதன் இலைகள் புதியதாகவும், பச்சை நிறமாகவும் இருந்தால், அந்த முள்ளங்கி ஃபிரஷானது என்று அர்த்தம்.

ஏனெனில் அதன் இலைகள் சில நாட்களுக்குப் பிறகு மஞ்சள் நிறமாக மாறிவிடும். முள்ளங்கி இலைகளின் நிறத்தை வைத்துக் கண்டறிய முடியாவிட்டால், அதன் வாசனையை வைத்துக் கண்டுபிடிக்கலாம். கடினமான முள்ளங்கியை தேர்ந்தெடுக்கவும். கடினமாக இருக்கும் முள்ளங்கி சுவையாக இருக்கும்.

மென்மையாக இருக்கும் முள்ளங்கி சுவையாக இருக்காது, மற்றும் அவை சரியாக வேகாது என்றும் கூறப்படுகிறது. எனவே கடினமாக இருக்கும் முள்ளங்கியை தேர்ந்தெடுத்து வாங்குவது நல்லது, அதே சமயம் முள்ளங்கி காய்ந்ததாகவும் இருக்க கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும்,

நீங்கள் முள்ளங்கியை உடைத்து, அது எளிதில் உடைகிறதா என்றும் பார்க்கலாம். எளிதாக உடைந்தால் அது ஃபிரெஷான முள்ளங்கி என்று அர்த்தம். நிறத்தை வைத்துக் கண்டறியலாம். முள்ளங்கி

புதியதா இல்லையா என்பதை அதன் நிறத்தை வைத்தும் தீர்மானிக்கலாம். முள்ளங்கியில் பல வகைகள் உள்ளன, அவை நிறம் மற்றும் அமைப்பில் மாறுபடும், சிவப்பு முள்ளங்கி சற்று உறைப்பாக இருக்கும் என்று கூறப்படுகிறது, அதே சமயம் வெள்ளை முள்ளங்கி மிதமானதாகவும், சற்று இனிப்பாகவும் இருக்கும். சிவப்பு முள்ளங்கியின் சுவையும் வெள்ளை முள்ளங்கியிலிருந்து சற்று வேறுபட்டதாகவே இருக்கும்.

தற்போது சிவப்பு முள்ளங்கி, ஜப்பானிய வெள்ளை முள்ளங்கி, பூசா முள்ளங்கியென பல வகையான முள்ளங்கிகள் கடைகளில் கிடைக்கின்றன. இத்தகைய சூழலில், முள்ளங்கியை வாங்கும்போது, அதன் தரத்தில் கவனம் செலுத்த வேண்டும்.

சிலர் தரம் குறைந்த முள்ளங்கியை அதிக விலைக்கு வாங்கிவிடுகிறார்கள். இதை தவிர்த்து, முள்ளங்கியின் தரத்தை வைத்து மட்டுமே முள்ளங்கியை வாங்குவது நல்லது.

பொறுப்புத் துறப்பு

இந்தக் கட்டுரையின் மூலம் உங்களுக்கு தகவல்களை வழங்குவது மட்டுமே எங்கள் நோக்கமாகும். எந்தவொரு மருந்தையும், சிகிச்சையையும் நாங்கள் பரிந்துரைக்கவில்லை. ஒரு மருத்துவர் மட்டுமே உங்களுக்கு நல்ல ஆலோசனையை வழங்க முடியும்.



- மகிழ்ச்சியின் பாதையை எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியாது, காரணம் மகிழ்ச்சி என்பதே பாதைதான்.

– புத்தர்

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் சித்திரை மாத கிருத்திகை 08/05/2024 புதன்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள்

வலையப்பட்டி திரு.M.நாரயணன் செட்டியார் குடும்பத்தினர், வேந்தன்பட்டி திரு.P.L.செல்வநாதன் செட்டியார் குடும்பத்தினர் , மற்றும் தேவகோட்டை திரு.VR.சுப்பிரமணியன் செட்டியார் குடும்பத்தினர் குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள

பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம் .

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



க .ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம் .

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவான பகுத்தாய்வு.

EMS Ltd.

**EMS LIMITED** ... வரும் காலங்களில் நீர் முதலீட்டுத் திட்டம் என்றால் ... **EMS** ஒரு சிறந்த தீர்வு. இந்நிறுவனம் **ISO** 9001:2015 சான்றிதழ் பெற்றது. தில்லியைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு பல்துறை **EPC** நிறுவனமாகும். இது நீர் மற்றும் கழிவு நீர் சேகரிப்பு, சுத்திகரிப்பு மற்றும் அகற்றுதல் ஆகியவற்றில் ஆயத்த தயாரிப்பு சேவைகளை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்றது. பொறியியல் மற்றும் வடிவமைப்பு முதல் நீர், கழிவு நீர் மற்றும் வீட்டு கழிவு சுத்திகரிப்பு வசதிகளை நிர்மாணித்தல் மற்றும் நிறுவுதல் வரை முழுமையான சிறந்த தீர்வுகளை **EMS** வழங்குகிறது.

இந்நிறுவனம் 1998 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது . இந்நிறுவனத்தின் நோக்கம் ஆரோக்கியம் மற்றும் பசுமையான சூழலை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

இந்நிறுவனத்தின் பங்குகள் சில மாதங்களுக்கு முன்பு பட்டியலிடப்பட்டுள்ளது மற்றும் சந்தைக்கு புதியது. ஆனால் ஆய்வு மற்றும் நிறுவனத்தின் அடிப்படை மற்றும் நிதி அளவுருக்குகள் வலுவாக இருப்பதால் மிகவும் நியாயமான மதிப்பாக உள்ளது .நிறுவனம் தொடர்ந்து வலுவாகச் செயல்பட்டால், நல்ல வளர்ச்சியைக் காணலாம்.

ஆயத்த தயாரிப்பு அடிப்படையில் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான பொறியியல், கொள்முதல் மற்றும் கட்டுமான நடவடிக்கைகளை வழங்குவதில் **EMS LTD** தொடர்ந்து பொறாமைப்படும் வேகத்தில் வளர்ந்து வருகிறது. நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் உள்கட்டமைப்பு திட்டங்களை நிறைவேற்றுவதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. இதில் புவியீர்ப்பு மற்றும் அழுத்தம் குழாய் நெட்வொர்க்குகள், நீர் நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும் , குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம் .

சுத்திகரிப்பு நிலையங்கள், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், நீர்த்தேக்கங்கள், பம்ப் ஹவுஸ்கள் போன்றவை அடங்கும். **EMS LTD.**, முன்னணி மின்சார ஒப்பந்ததாரர்களில் ஒருவராகவும் உருவாகியுள்ளது. இந்தியா முழுவதும் ஆயத்த தயாரிப்பு மின் பணிகளை மேற்கொண்டு வருகிறது.33/11 **KV**, 66/33 **KV & amp;** 132/33**KV** துணை மின்நிலையங்கள், உள் / வெளிப்புற மின்மயமாக்கல் பணிகள், மின்மாற்றிகளின் விறைப்பு,

சோதனை மற்றும் ஆணையிடுதல், HT/LT பேனல்கள், பேருந்து குழாய்கள் மற்றும் ரைசிங் மெயின்கள், நிலத்தடி அகழி ஆகியவற்றை நிர்மாணிப்பதில் நிபுணத்துவம் பெற்றுள்ளது . **EMS LTD.**, கட்டிடம் மற்றும் சாலைப் பணிகளுக்கான **EPC** சேவைகளையும் வழங்குகிறது மற்றும் வாடிக்கையாளர்களுக்கு பெரிய அளவிலான திட்டங்களை வெற்றிகரமாக வழங்கி வருகிறது.

**EMS** குழும நிறுவனங்கள் **PPP** அடிப்படையில் தொழில்துறை கழிவு சுத்திகரிப்பு, சூரிய மின் உற்பத்தி மற்றும் சர்வதேச ஆயத்த தயாரிப்பு உள்கட்டமைப்பு திட்டங்கள் போன்ற பல்வேறு வணிகங்களிலும் ஈடுபட்டுள்ளன.

**நிறுவனத்தால் வழங்கப்படும் முக்கிய சேவைகள்:**

1) கழிவுநீர் மற்றும் புதிய கழிவுநீர் வலையமைப்பின் வடிவமைப்பு, கொள்முதல், இடுதல், இணைத்தல்,

சோதனை செய்தல், ஆணையிடுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் மற்றும் பழைய/தற்போதுள்ள

கழிவுநீர் வலையமைப்பைப் புதுப்பித்தல் உள்ளிட்ட அவற்றுடன் தொடர்புடைய பணிகள்.

2) அகழி இல்லாத தொழில்நுட்பம் மூலம் குழாய் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்.

3) கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

4) கழிவுநீர் பம்பிங் நிலையங்களின் வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

5) நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

6) புதிய நீர் வழங்கல் மற்றும் விநியோக

வலையமைப்புகளை வடிவமைத்தல், கொள்முதல் செய்தல், இடுதல், இணைத்தல், சோதனை செய்தல், இயக்குதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் உள்ளிட்ட நீர் வழங்கல் பணிகள், அதே போல் நீர்த்தேக்கத்தின் கட்டுமானம் மற்றும் பழைய/தற்போதுள்ள நீர் வழங்கல் உள்கட்டமைப்புகளை புதுப்பித்தல்.

7) புதிய சாலை நெட்வொர்க்குகளை உருவாக்குதல் மற்றும் ஏற்கனவே உள்ள சாலை நெட்வொர்க்குகளை பழுதுபார்த்தல்/புதுப்பித்தல் உள்ளிட்ட சாலை மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகள்.

8) பவர் டிரான்ஸ்மிஷன் மற்றும் விநியோக உள்கட்டமைப்பின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்.

9) கட்டிடங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வேலைகளின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்.

10) பொது உள்கட்டமைப்பு வசதிகள் **&** பயன்பாடுகளின் வடிவமைப்பு, கட்டுமானம், செயல்பாடு மற்றும் பராமரிப்பு.

**SKUEM Water Projects Pvt Ltd., EMS LTD** இன் துணை நிறுவனமாகும் .பொது தனியார் கூட்டாண்மையின் கீழ், ஹரித்வாரில் உள்ள **SIDCUL** இல், 4.5 **MLD** திறன் கொண்ட (9 **MLD** வரை விரிவாக்கக்கூடிய) பொதுவான கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையை **(CETP)** சொந்தமாக வைத்து

நடத்துகிறது. உத்தரகாண்ட் லிமிடெட் மாநில தொழில் வளர்ச்சிக் கழகத்துடன் இந்தத் திட்டத்தின் கீழ், ஹரித்வாரில் உள்ள **SIDCUL** இல் அமைந்துள்ள தொழில்துறை அலகுகள், நிறுவனத்தால் அமைக்கப்பட்ட மீட்டர் சேகரிப்பு வலையமைப்பில் தங்கள் தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுகின்றன, பின்னர் அது **CETP** இல் சுத்திகரிக்கப்பட்டு முறையான சுத்திகரிப்பு மற்றும் வடிகட்டலுக்குப் பிறகு வெளியேற்றப்படுகிறது.

தொழிற்சாலைகள் வெளியிடும் கழிவுநீரின் அளவுக்கேற்ப கட்டணம் வசூலிக்கப்படுகிறது. **CETP** இன் சலுகைக் காலம் 2035 ஆம் ஆண்டு வரை உள்ளது.

நிறுவனத்தின் சில முக்கிய வாடிக்கையாளர்கள்:

1. **Uttarpradesh Jal Nigam**
2. **Construction & Design U.P Jal Nigam**
3. **Uttrakhand Pey Jal Nigam**
4. **Delhi Jal Board**
5. **Paschimanchal Vidhyut Vitaran Nigam Ltd**
6. **Purvanchal Vidhyut Vitaran Nigam Ltd**
7. **Uttarpradesh Rajkiya Nirman Nigam Ltd**
8. **Gaziabad Development Authority**
9. **Hscl**
10. **Ircon International Ltd**
11. **VaTech wabag**
13. **Nbcc**

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

**EMS Share Price Insights**

**Beating 3 Yr Revenue CAGR**

Company's annual revenue growth of 48.92% outperformed its 3 year CAGR of 33.62%. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**

**EMS Share Price Update**

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>17.07 | EPS - TTM (₹)<br>27.49 |
| MCap (₹ Cr.)<br>2,605.78 | Sectoral MCap Rank<br>34 |
| PB Ratio (x)<br>3.22 | Div Yield (%)<br>0.43 |
| Face Value (₹)<br>10.00 | Beta<br>- |
| VWAP (₹)<br>476.44 | 52W H/L (₹)<br>599.75 / 246.50 |

**EMS Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | 2.36% |
| 1 Week | 0.37% |
| 1 Month | 7.25% |
| 3 Months | 12.41% |
| 1 Year | N.A. |
| 3 Years | N.A. |
| 5 Years | N.A. |

இண்டஸ்ட்ரி PE 43.32 உடன் ஒப்பிடுகையில் கன்சோலிடேட்டட் PE விகிதம் 23.06, 19.39 (2023-03 இல் முடிவடையும் பன்னிரண்டு மாதங்கள்) ஒருங்கிணைந்த EPS ஐக் கொண்ட நிறுவனம். சமீபத்திய ஆய்வின் படி இந்நிறுவனத்தின் பங்குகள் ப்ரமோட்டர் வசம் 69.70% உள்ளது. நிறுவனம் கிட்டத்தட்ட கடனில்லா நிறுவனமாகும் . கடனாளி நாட்கள் 116ல் இருந்து 83.8 நாட்களாக குறைந்துள்ளது.

## நிறுவனத்தின் நிதி நிலை:

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**
Company's annual revenue growth of 48.92% outperformed its 3 year CAGR of 33.62%. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent less than 1% of its operating revenues towards interest expenses and 3.29% towards employee cost in the year ending 31 Mar, 2024. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | MAR 2024 | DEC 2023 | SEP 2023 | JUN 2023 | DEC 2022 |
|---|---|---|---|---|---|
| Total Income | 245.93 | 205.81 | 218.16 | 139.07 | 152.35 |
| Total Income Growth (%) | 19.49 | -5.66 | 56.86 | -8.71 | 24.25 |
| Total Expenses | 180.31 | 154.07 | 154.78 | 106.87 | 109.57 |
| Total Expenses Growth (%) | 17.03 | -0.46 | 44.83 | -2.46 | 38.94 |
| EBIT | 65.61 | 51.75 | 63.37 | 32.20 | 42.78 |
| EBIT Growth (%) | 26.80 | -18.35 | 96.79 | -24.72 | -2.23 |
| Profit after Tax (PAT) | 47.39 | 37.33 | 45.28 | 22.67 | 29.51 |
| PAT Growth (%) | 26.94 | -17.55 | 99.73 | -23.17 | 0.16 |
| EBIT Margin (%) | 26.68 | 25.14 | 29.05 | 23.16 | 28.08 |
| Net Profit Margin (%) | 19.27 | 18.14 | 20.76 | 16.30 | 19.37 |
| Basic EPS (₹) | 9.14 | 7.37 | 9.39 | 4.10 | 25.11 |

*All figures in Rs Cr, unless mentioned otherwise* — View Details

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

| ANNUAL | FY 2024 | FY 2023 | FY 2022 | FY 2021 |
|---|---|---|---|---|
| Total Assets | 970.20 | 641.41 | 502.55 | 378.31 |
| Total Assets Growth (%) | 51.26 | 27.63 | 32.84 | 22.80 |
| Total Liabilities | 169.68 | 148.59 | 121.43 | 76.24 |
| Total Liabilities Growth (%) | 14.20 | 22.36 | 59.28 | -2.38 |
| Total Equity | 800.52 | 492.83 | 381.12 | 302.08 |
| Total Equity Growth (%) | 62.43 | 29.31 | 26.17 | 31.34 |
| Current Ratio (x) | 6.14 | 5.41 | 3.82 | 4.54 |
| Total Debt to Equity (x) | 0.09 | 0.09 | 0.01 | 0.01 |
| Contingent Liabilities | 0.00 | - | - | - |

*All figures in Rs Cr, unless mentioned otherwise* — View Details

| INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS | CONSOLIDATED |
|---|---|---|---|---|
| **ANNUAL** | **FY 2024** | **FY 2023** | **FY 2022** | **FY 2021** |
| Net Cash flow from Operating Activities | -116.02 | - | 22.64 | 35.77 |
| Net Cash used in Investing Activities | -69.52 | - | -14.78 | -8.48 |
| Net Cash flow from Financing Activities | 176.20 | - | 2.76 | -10.90 |
| Net Cash Flow | 9.34 | - | 10.62 | 16.40 |
| Closing Cash & Cash Equivalent | 72.33 | - | 61.05 | 50.43 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | 18.48 | 0.00 | 21.06 | 48.17 |
| Total Debt/ CFO (x) | -0.61 | - | 0.16 | 0.09 |


*All figures in Rs Cr, unless mentioned otherwise* View Details

| INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS | CONSOLIDATED |
|---|---|---|---|---|
| **ANNUAL** | **FY 2024** | **FY 2023** | **FY 2022** | **FY 2021** |
| Return on Equity (%) | 1.92 | 21.94 | 20.55 | 23.80 |
| Return on Capital Employed (%) | 24.16 | 26.92 | 28.74 | 32.87 |
| Return on Assets (%) | 1.56 | 16.78 | 15.55 | 19.00 |
| Interest Coverage Ratio (x) | 34.95 | 40.38 | 20.15 | 23.44 |
| Asset Turnover Ratio (x) | 0.98 | 0.94 | - | 0.90 |
| Price to Earnings (x) | 147.06 | - | - | - |
| Price to Book (x) | 2.79 | - | - | - |
| EV/EBITDA (x) | 9.94 | - | - | - |
| EBITDA Margin (%) | 27.66 | 28.82 | 32.16 | 31.56 |

## மேம்பட்ட விளக்கப்படம்:



## செயல்திறன்:





EMS STOCK PERFORMANCE | **RATIO PERFORMANCE** | SEE ALL PARAMETERS

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| EMS | 17.07 | 3.26 | 1.52 | 1.58 | 33.62 | 26.85 |


Add More stocks of your interest to compare

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:



*Showing EMS Shareholding as on 31 Mar 2024*

| CATEGORY | 31 MAR 2024 | 31 DEC 2023 | 30 SEP 2023 |
|---|---|---|---|
| Promoters | 69.70 | 69.70 | 69.70 |
| Pledge | 0.00 | 0.00 | 0.00 |
| FII | 2.78 | 4.09 | 7.23 |
| DII | 1.43 | 1.45 | 1.78 |
| Mutual Funds | 0.00 | 0.00 | 0.00 |
| Others | 26.08 | 24.75 | 21.28 |




*Showing Shareholding as on 31 Mar 2024*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 3,87,03,882 | 69.70 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 15,45,105 | 2.78 % | -1.31 |
| DII | 7,96,955 | 1.43 % | -0.02 |
| Others | 1,44,83,865 | 26.08 % | 1.32 |

## எமது பரிந்துரை:

இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 470 மற்றும் குறையும் தறுவாயில் ரூபாய் 380 வரை வாங்கலாம். இலக்கு ரூபாய் 700, 800, 900+++. கால வரையறை 24 மாதம் முதல் 48 மாதம்.

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள் :

1. Marksans Pharma Ltd... Entry 160 to 170. Add more on down till 120. Target 220 and 250.
2. Indo National Ltd... entry 570 to 580. Add more on down till 500. Target 750 and 900.
3. Rishabh Instruments Ltd... entry 450 to 460. Add more on down till 380. Target 550 and 650.
4. D P Wires Ltd... entry 450 to 460. Add more on down till 380. Target 600 and 700.
5. General Insurance Corporation of India... entry 350 to 360. Add more on down till 280. Target 400 and 440.
6. Irm Energy Ltd... entry 480 to 490. Add more on down till 380. Target 600 and 700.

**பொறுப்புத் துறப்பு**

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our “Young generation” can learn and start doing analysis and entering in potential stock @ Correct Entry / CorrectExit to win the Trade and Investment in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** — Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This month Class will be on Saturday 10th June 2024.

**Webinar Timings** — India Time: 17:30Hrs-18.30Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.

**# For further Details Contact:** +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com




# நீங்கள் எப்படி... கடக லக்னம்..!

ஜோதிடர் எல்லி

நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்களுக்கு நெஞ்சார்ந்த வணக்கங்கள்!

மேஷம் தொடங்கி மீனம் வரையிலான பன்னிரு லக்னம் பற்றிய தகவல்களை கடந்த இதழ்களில் எழுதி இருந்தேன். அதன் தொடர்ச்சியாக இம் மாத இதழில் கடக லக்னம் பற்றி பார்ப்போம்!

காலப்புருஷ தத்துவத்தின் படி இது நான்காம் பாவகம்! மனோ காரகன் சந்திரனின் ஆட்சி தாயார்,தாய்வழி உறவு பூமியின் ஆழ்பகுதிமறைபொருள், புதையல் செல்வம், வியாபாரம், ,நீர்நிலைகள்,வீடு, வாகனம் இவற்றை உணர்த்தும் இடம்! சந்திரன் மனதை ஆள்பவர்,



நவகிரகங்களில் வேகமாக நகர்பவர் ,ஒரு ராசியை 2 1/4 (இரண்டேகால்) நாட்களில் கடப்பவர்.

ஜோதிடத்தில் சந்திரன் பெண் கிரகம் என்றே சொல்லப்பட்டுள்ளது. ஜாதகத்தில் தாயார், தாயின் சகோதரிகளையும் தாய் போன்ற தன்னுடன் பிறந்த மூத்த சகோதரியையும் குறிப்பவர்.

அலைபாயும் மனதை அடக்கி ஆளும் திறமை வாய்ந்தவரே வாழ்வில் வெற்றி பெறுகிறார். அப்படிப்பட்ட சந்திரனே கடகத்திற்கு லக்னாதிபதி யாக வருகிறார் என்றால் எப்படி இருக்கும்! ஆயினும் சர லக்னமான கடகம் நீண்ட ஆயுளை கொடுக்கும் பாவகம் ஆகும்.

## கடக லக்னகாரர்கள் எப்படி இருப்பார்கள்?



இவர்கள் குடும்ப பாசம் மிக்கவர்கள்.தன் சுற்றத்தை பேணி காப்பவர்கள் பெற்ற அன்னை மீது அதீத பாசம் கொண்டவர்கள். லக்னாதிபதி சந்திரன் என்பதால் இயல்பாகவே சிந்தனை மேலோங்கும்! சிலர் ஆழ்நிலை தியானத்தில் ஈடுபடுவதும் உண்டு. இவர்கள் தன் சுயத்தை மாற்றி கொள்ள விரும்புவதே இல்லை இயல்பாகவே கொஞ்சம் கருமிகள்! அறிவுரைகள்,போதனைகளை தாராளமாக வழங்குவார்கள்!

இவர்களிடம் தானமோ,பணமோ எளிதில் பெற முடியாது! எளிமை மற்றும் பாரம்பரிய விரும்பிகள் இவர்கள்!

திருமண வாழ்க்கையில் சறுக்கல் ஏற்பட வாய்ப்புள்ள லக்னம். முதல் திருமணத்தில் தோல்வி ஏற்பட்டாலும் இரண்டாவது மணம் சிறக்கும் களத்திர தோஷம் கழிந்தது என்பதால் வாழ்வில் முன்னேற்றம் காணலாம்.

எடுத்த காரியத்தை முடிக்க அதீத முயற்சி,அதற்காக யாரை வேண்டுமானாலும் இறங்கி போய் அணுக தயங்கவோ சுய கௌரவமோ பார்க்க மாட்டார்கள். காரியம் ஆகணும்னா கழுதையே ஆனாலும் காலை பிடி என்கிற பழமொழியை முறையாக கடை பிடிப்பவர்கள் இவர்கள் .

காரியம் ஆன பின் அவ்வளவுதான் அந்த வகையில் சமர்த்தர்கள்! ஓரே இடத்தில் அமர்ந்து பணி செய்ய விரும்ப மாட்டார்கள், சுற்றி சுழன்று கொண்டே இருப்பார்கள் இதனால் அலைச்சல் மிகுந்த துறையில் சாதிப்பார்கள்.கடகத்திற்கு கிரகங்கள் அமர்வது என்ன பலன்களை கொடுக்கும் என்பதை பார்ப்போம்.



சந்திரன் லக்னாதிபதி என்பதால் கண்டிப்பாக வலுக்க வேண்டும். இரண்டாம் அதிபதியும் தன வாக்கு ஸ்தானாதிபதியுமான சூரியன் சந்திரனுடன் பரிவர்த்தனை ஆவது மிக சிறப்பு! இதனால் ஜாதகருக்கு நாவன்மை வாக்கு ஸ்தானம்

பலப்படும் வாக்கின் மூலமே வருவாயை ஈட்டலாம்! 2க்குடையவர் சூரியன்,5க்குடையவர் செவ்வாய் எனவே பொதுவாக அரசு அதிகார பதவிகளுக்கு இவர்களுக்கு வாய்ப்பு அதிகம் . குரு 6,9க்குடையவர் இங்கே ஆறாம் ஆதிபத்யம் மிகுந்து செய்வாரா இல்லை 9பாவகத்தை அளிப்பாரா என்று ஆய்ந்தால் பாக்கியத்தை விட சற்று ஆறாம் ஆதிபத்யத்தையே கொடுக்கிறார்.

ஆறாம் ஆதிபத்யம் என்பது நோய், கடன், வம்பு வழக்குகள், பிறரிடம் சம்பளத்திற்கு பணி புரிவது ,எதிரி, போட்டியில் வெல்லும் நிலை இவற்றை குறிக்கும். 9ம் ஆதிபத்யம் வாழ்வின் அனைத்து என்பது அனைத்து பாக்கியங்களையும் பெறுவது ஆகும். புகழ், சமூகத்தில் நன்மதிப்பு, கல்வியறிவு மூலம் ஏற்படும் கீர்த்தி , தந்தையார் மூலம் கிடைக்கும் கௌரவம், கலையுணர்வு, ஒழுக்கம், ஆன்மீக பயணங்களையும் குறிக்கும்.

கடக லக்னகாரர்கள் பலர் குரு (தசை)திசை முதல் பாதியில் ஆறாம் ஆதிபத்தியம் சார்ந்த

பலன்களை அனுபவித்து விட்டு இரண்டாவது பாதியிலாவது 9ம் வீட்டின் பாக்கியத்தை

எதிர்பார்த்து ஏமாந்தவர்கள்தான் மிகுதியாக உள்ளனர் .

6,9 ஆதிபத்யத்தில் இங்கு 6க்குடையதை மிகுந்து குரு பகவான் செய்கிறார் இதற்கான காரணம்

என்னவென்றால் குரு பகவான் இரண்டு ஆதிபத்யம் பெறுவது தான் மேலும் ஜாதகத்தில் அமரும் நிலையையும் கணக்கிட வேண்டும் குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து விலகி ஆறாம் பாவகத்தோடு சம்மந்தம் கொள்ளும் போது ஜாதகருக்கு அசுப பலன்கள் கூடுதலாக நடந்து விடுகிறது.

குரு 9ம் வீட்டோடு தொடர்பு கொண்டு சுப வலுவுடன் இருப்பின் முறையாக 6,9 பலன்களை பிரித்து செய்வார். குரு சந்திரன் 1,9பரிவர்த்தனை (குரு லக்னத்தில் உச்சம் பெற்று சந்திரன்

9ல் இருப்பது)எனில் மிக சிறப்பு நற்பலன்கள் உண்டு தந்தையார் மூலம் மேன்மை கிட்டும்! 5ல் குரு தனித்து அமர்தல் ஆகாது புத்திர சோகம் வாட்டும்! செவ்வாய் லக்ன சுபர் 5ல் ஆட்சி பெறலாம்.ஏழில் உச்சம் பெற்றாலும் நன்மை உண்டுதான்! 9ல் அமரலாம், 10லும் ஆட்சி பெறலாம் இங்கே செவ்வாய் க்கு கேந்திராதிபத்ய தோஷம் கிடையாது.

சனி பகவான் 7,8க்குடையவர் ஆயுள் காரகனே ஆயுள் ஸ்தானாதிபதி யாகவும்வருகிறார்!. சனி இவர்களுக்கு மிக கண்டிப்பாக வலுத்தே ஆக வேண்டும்.

சனி 4ல் உச்சம் பெறலாம் பாதிப்பு இல்லை 7ல் ஆட்சி பெற்றால் மிக சிறப்பே மக்கள் வசியம், ஊர் மரியாதை கிடைக்கும்..நண்பர்கள் அடிமை ஆவார்கள்!



எனினும் களத்திரம்(திருமணம் ) மட்டுமே சற்று பாதிக்கும் ! அது முறைபடுத்தி ஏற்று கொண்டால் வெற்றிதான்! கடக லக்னகாரர்கள் சிலருக்கு சனி பகவான் மகா தசை(திசை)பெரும் யோகத்தை கொடுத்துள்ளது அதற்கு சனி சுபத்துவ நிலையில் இருக்க வேண்டும்.சனி பகவான் எட்டில் அமர்ந்தால் ஆயுள்

பயமில்லை காரகத்துவம் கெடாது..எனினும் சில உடல் உபாதைகள் வந்து போகும்..

சனி பகவான் நீசம் பெறுதல் பெரும் பாதிப்பு ஆகும். சந்திரன் உடன் அமர்ந்து நீசம் பெறின் மொத்த யோகவும் கிடைக்காமல் போகவும் வாய்ப்பு உள்ளது . லக்னாதிபதியும் குரு பகவானும் கெட்டு நீச சனி தசை நடந்தால் ஆயுளுக்கே பாதிப்பு கண்டம் ஏற்படும்! கேது திசை ஓரளவிற்கு நன்மை பயக்கும் ,சுபர் சம்மந்தம் பார்வை வேண்டும் கடகத்திற்கு லக்னசுபர்களுடன் ராகு சம்மந்தபட கூடாது.அவ்வாறு அமைந்தால் பாதகமே நிகழும்!

புதன் இந்த லக்னத்திற்கு கடுமையான கேடுகளையே வழக்குவார் அவரால் நற்பலன்கள் கிடையாது. 11ல் அமர்ந்தால் மூத்த சகோதரர் மூலம் நஷ்டம் உண்டு.

தரகு தொழில் கைகொடுக்காது .புதன் வலுத்தால் சோதிடம் கூட இவர்களுக்கு எதிர் மறையாக போகலாம் ஊடகங்களில் வெளிவரும் எதிர்மறையான பொதுபலன்களையே பிடித்து கொண்டு அலைவார்கள் பாவம்!

புதன் லக்ன சுபர்களோடு பரிவர்த்தனை பெற்றால் மட்டுமே ஓரளவிற்கு நன்மை செய்வார். சுக்கிரன் இந்த லக்னத்திற்கு பாதகாதிபதி லக்னத்தில் அமர்ந்தால் ஜாதகருக்கு திருமணம் கேள்விகுறி!

ஏழில் அமர்ந்தாலும் மிக பாதிப்பு சுக்கிரன் 11ல் ஆட்சி பெற்றால் முத்த சகோதரம் பலனின்றி போவார்! ஜாதகருக்கு பெண்களால் தொல்லை மிகும்! பணம் பறிபோகும்! சுக்கிரன் இவர்கள் ஜாதகத்தில் வலுத்தால் அதன் காரகத்துவத்தில் கவரப்பட்டு வீணாய் போவார்கள்! அதாவது தவறான பெண் மோகம், பெண்களால் அவமானம் வம்பு வழக்குகள் என்று போவதற்கு சூழல் உருவாகலாம்.

பெண் ஜாதகர்கள் எனில் சுக போகங்களில் பாதிப்பு உண்டாகலாம்.

இதுவரையிலும் சந்திரன் வீடான கடக லக்னம் பற்றிய தெளிவான ஒரு ஆய்வை உணர்ந்து இருப்பீர்கள்.

அடுத்த இதழில் சிம்ம லக்னம் பற்றிய தகவல்களுடன் சந்திப்போம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர் . ஜோதிடம் ,தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் , ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 99 44 86 59 43



## பொன்னான புத்தர் மொழிகள்...!



- எதையும் மாற்றும் சக்தி காலத்திற்கு மட்டுமல்ல; உனது சொல்லுக்கும் உண்டு.
- நிம்மதிக்கான இரண்டு வழிகள்: விட்டுக்கொடுங்கள் இல்லை விட்டுவிடுங்கள்.
- விழுதல் என்பது வேதனை. விழுந்த இடத்தில், மீண்டும் எழுதல் என்பது சாதனை.

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com